# களத்தில்

(30.12.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (200) அன்பளிப்பு : 60 p




எமக்கு முன்னால், கால விரிப்பில், ஒரு புதுயுகம் எமக்காகக் காத்துநிற்கிறது. எமக்குப் பின்னால், கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப் போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

## புத்தாண்டு வாழ்த்து

*புதிய ஆண்டு புத்தெழுச்சி பொங்க...*
*கட்டற்ற வாழ்வின் வரவை*
*வரவேற்று*
*நமக்கிடை நாங்கள்*
*வாழ்த்துக்கள் பகிர்வோம் !*

## 2000

## 200 வது இதழ்

**புத்தாயிரம் ஆண்டில் பிரவேசிக்கும் அவசரம்... ஆவலுடன் உலகம்...!**
**"இந்தப் புதுயுகம் எமக்கே" என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் தமிழர்கள்!!**
**நமக்கான புதுயுகத்தில் புதியன படைக்கும் துடிப்புடன்...**
**200வது களத்தினூடு காலடி வைக்கிறோம்!!!**

# விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கும் ஆனையிறவுப் படைத்தளம்.

வன்னிப் பெருநிலப்பரப்பை...
மணலாற்றின் பெரும்பகுதியை மீட்டபடி
யாழ்குடாநாட்டை மீட்கும் முனைப்புடன்...

*50 நாட்களைக் கடந்து*
## ஓயாத அலைகள் 3

யாழ் குடாநாட்டை வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடுக்கும் வாயிலில், தமிழர் பிரதேசங்களை, சிறிய நிலப்பரப்பால் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருப்பதே சிங்களப்படையின் ஆனையிறவுப் பெருந்தளம். தனது ஆக்கிரமிப்புக்கு வசதியாக சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே, சிங்கள ஆக்கிரமிப்பு அரசு, ஆனையிறவுத் தளத்தை நிறுவியது. குடா நாட்டு வாயிலில் குந்தியிருக்கும் ஆக்கிரமிப்புப் பெரும் பூதம்போல் சகல படைபலத்துடனும் அமைந்துள்ள ஆனையிறவுப் படைத்தளம், இன்று விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் மெல்ல மெல்ல வீழ்ந்துவருகின்றது. அதன் பிரதான கடல்வழி விநியோகத் தளமான, வெற்றிலைக்கேணி கடற்படைத்தளமும், கட்டைக்காடு இராணுவ முகாமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த முற்றுகை நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது.



இராணுவச் சமநிலையில், கைஓங்கிய நிலையில், ஆளணி ஆயுத பலத்திலும், மக்கள் பலத்திலும் உயர்ந்துள்ள நிலையில், விடுதலைப் புலிகள், ஆனையிறவுத்தளம் மீதான முற்றுகையை மேற்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், ஆனையிறவுப் படைத்தளம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முதலாவது முற்றுகைச் சமரையும் இங்கு திரும்பிப் பார்ப்பது பொருத்தமானதே. → 3

*அன்று...*
## ஆ.க.வெ இராணுவ நடவடிக்கை

ஆயிரத்தித் தொளாயிரத்து தொண்ணூற்றியோராம் ஆண்டு, சிங்களப்படையின் வலுமிக்க ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் முதல்முதலாக முற்றுகையிடப்பட்டது.

10-07-1991 அன்று அதிகாலை ஆரம்பித்து, 09-08-1991 வரைப்பட்ட முப்பத்தியொரு நாட்கள், இந்த முற்றுகைச் சமர் இடம்பெற்றது.

கரந்தடிப்படையணி என்ற கட்டத்தைக் கடந்து, மரபுப்படையணிக்குரிய சிறப்புக்களைப் பெற்ற ஒரு விடுதலை இராணுவமாக, விடுதலைப் புலிகளை இனங்காட்டிகொண்ட சமராக இது விளங்கியது.

இம்முற்றுகைச் சமர் இடம்பெற்ற பூகோள அமைப்பு, பாவிக்கப்பட்ட ஆயுதங்கள், அந்த இராணுவ நடவடிக்கைக்கான போர்முறைத் திட்டங்களை கருத்திற் கொண்டு, அம்முற்றுகைச் சமருக்கு விடுதலைப் புலிகள், ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை என பெயர் சூட்டியிருந்தனர்.

விடுதலைப் புலிகளால், பெயர் சூட்டப்பட்டு தொடரப்பட்ட முதலாவது இராணுவ நடவடிக்கை என்ற அடிப்படையிலும், 91ம் ஆண்டு நடைபெற்ற, இம்முற்றுகைச் சமர் முக்கியம் பெறுகின்றது.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# புத்தாயிரமாம் ஆண்டில் விடுதலை நிச்சயம்

2000மாவது ஆண்டு என்னும் புத்தாயிரம் ஆண்டில் உலகம் நுழைந்து கொண்டிருக்கிறது. இந்த புத்தாயிரமாம் ஆண்டில் தமிழீழ மக்களின் சுதந்திர வாழ்வு நனவாகும் என்பதற்கான உத்தரவாதத்தை ஓயாத அலைகள் 3 அளித்துள்ளது. இந்த மகிழ்ச்சி உணர்வுடன் தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும் 2000ஆம் ஆண்டில் புது நம்பிக்கையுடன் எங்கள் தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் கால் வைக்கின்றோம்..

அதே நேரத்தில் சிறீலங்கா தனது ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்காவை தேர்தல் ஒன்றின் மூலம் தெரிந்தெடுத்துள்ளது. இதனை சந்திரிகா தனது தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு சிங்கள மக்கள் அளித்த பேராதரவாக கருதி புத்தாயிரம் ஆண்டிலும் தமிழ் மக்கள் மீதான தனது இனஅழிப்பு நடவடிக்கைகளையும் தமிழர் தாயகத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைக்கும் இராணுவ ஆக்கிரமிப்புக்களையும் வேகப்படுத்துவார் என்பது நாமனைவரும் அறிந்த ஒன்று.

ஆயினும் ஓயாத அலைகளின் 50 நாளுக்கு மேற்பட்ட அனுபவங்களும் ஆனையிறவு பிரதான முகாமினை நோக்கி முன்னேறி வரும் விடுதலைப் புலிகளின் ஆக்கிரோஷமான தாக்குதல்களும் சிறீலங்கா படைத் தலைமைகளுக்கும் அவர்களின் தலைமைத் தளபதியாகிய சந்திரிகா அம்மையாருக்கும் இனியும் இராணுவ நடவடிக்கைகளில் இறங்குவது எவ்வளவு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணர்த்தி வருகின்றன. சிறீலங்காப் படைகளின் பலத்த ஆக்கிரமிப்பில் இருந்த யாழ் குடாநாட்டின் மீட்சிக்கும் திகதி குறிக்கப்பட்டு விட்டதை அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. இதனால் சிறீலங்கா வடக்கில் தனது ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்த இழந்த உயிர் பொருள் இழப்புக்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகியுள்ளது.


இருந்தபோதிலும் தமிழின அழிப்பு என்பது சிறீலங்காவின் இராணுவ செயல் முறையாக மட்டுமல்லாது அரசியல் செயற்திட்டமாகவும் இருப்பதினால் அதனை எந்த விதத்திலாவது முன்னெடுப்பதன் மூலமே பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஆசியை, ஆதரவை பெற்று ஆட்சியில் நிலைபெற வேண்டுமென்ற அவா மற்றெல்லாவற்றையும் விட சந்திரிகாவிடம் மேலோங்கி காணப்படுகிறது. இதனால் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான யுத்தங்களும் ஆக்கிரமிப்புக்களும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஏனெனில் சாதாரண தமிழ் மக்களுக்கும் அவர்களின் தமிழீழத் தாயகத்திற்கும் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு இழப்புகளும் சிங்கள பௌத்த பேரினவாதத்தைப் பொறுத்தவரை பெரு வெற்றிகளாக கருதப்பட்டு வருகிறது.

ஒரு இனத்தை வாழவிடாது தடுப்பதும் இந்த இனத்தின் உறுப்பினர்களை அவர்கள் அந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காக அழிப்பதும் இனஅழிப்பு என்ற சர்வதேச குற்றச் செயலாகும். தமிழீழ மக்களைச் சிறீலங்கா பகிரங்க இனஅழிப்பு செய்து வருகின்ற போதிலும் அதனைப் பார்த்தும் சர்வதேச அமைப்புக்கள் உரிய நடவடிக்கைகளை சிறீலங்காமேல் எடுக்கத் தவறி வருவதினாலேயே சிறீலங்கா தனது இனஅழிப்பு அரசியல் செயற்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு அப்பாவித் தமிழர்களை இனஅழிப்பு செய்து வருகிறது. எனவே தமிழ் மக்களது அநியாயமான உயிரிழப்புக்களை உடமையழிவுகளை உடன் தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அமைப்புக்களும் புத்தாயிரம் ஆண்டில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையேல் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளவராக தேர்தல் ஒன்றின் மூலம் உலகிற்கு காட்டியுள்ள சந்திரிகா தனக்கு வாக்களிக்க மறுத்து சிறீலங்காவின் இறைமையை நிராகரித்துள்ள தமிழ்ப் பொதுமக்களை இனஅழிப்பு செய்யும் நடவடிக்கைகளை வேகப்படுத்துகையில் அதிக தமிழர்கள் பலியாகிவிடுவர். இதனைத் தடுக்க பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலைகளை உருவாக்கி மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடனான பேச்சுக்கள் மூலம் சிறீலங்கா தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண உதவவேண்டிய பொறுப்பு உலகநாடுகளினுடையது என்பதே விடுதலைப் புலிகளினதும் அனைத்து தமிழர்களதும் ஏகோபித்த கோரிக்கை.

சந்திரிகாவின் தேர்தல் வெற்றியென்பது தமிழர்கள்மீதான மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியே, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழர்களுக்கெதிரான தீர்க்கமான நிலைப்பாடு ஆகும். இதனை எதிர் கொண்டு தமிழீழ மக்களின் உயிர்களையும், உடமைகளையும், தேசத்தையும் காத்துநிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உடனடியாக பேருதவிகளை அளிக்க புலம்பெயர் தமிழர்கள் தொடர்ச்சியாக செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் . தமிழீழத் தாயகத்தின் தரையும் கடலும் மட்டுமல்ல வானும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்ய ஒவ்வொரு புலம்பெயர் தமிழனும் கங்கணம் கட்டி நிற்கின்றான்.

தமிழீழ மக்கள் அனைவரதும் பேராதரவுக்கும் பெருமதிப்புக்குமுரிய தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிப்படையான சர்வதேச அங்கீகாரம் ஒன்றே சிறீலங்காவின் அனைத்து இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் தன்மைவாய்ந்தது என்பதை சர்வதேச நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் மீண்டும் இடித்துக் கூறும் புலம்பெயர் தமிழர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரியாது 20ஆம் நூற்றாண்டில் விட்ட பிழையை 21ஆம் நூற்றாண்டிலும் தொடர வேண்டாமென உலகை கேட்டு நிற்கின்றனர்.

சிறீலங்காவின் பரப்புரைகளில் மயங்காது இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தை கண்டறிய ஆவன செய்யுமாறு அனைத்து சர்வதேச அமைப்புக்களையம் நாடுகளையும் புலம்பெயர் தமிழர்கள் புத்தாயிரம் ஆண்டில் வலியுறுத்தி நிற்கின்றனர். இனியும் சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினை - உள்நாட்டு யுத்தம் - பயங்கரவாதப் பிரச்சினை - சிறீலங்கா ஒரு ஜனநாயக நாடு என்ற போலிக் கதைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு மீட்கப்பட்டு வரும் தமிழீழத் தேசத்தை அங்கீகரிக்கும்படியும் தமிழீழ மக்களை இனஅழிப்பு செய்யும் சிறீலங்காவுக்கான ஆயுத உதவிகள் இராணுவப் பயிற்சிகள் நிதியளிப்புக்கள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்யுமாறு பணிவன்பாக உலக நாடுகளை வேண்டி நிற்கின்றனர். உலக நாடுகள் நீதியுடனும் நேர்மையுடனும் தமிழீழ மக்களின் பிரச்சினைகளை நோக்குமானால் புத்தாயிரமாம் ஆண்டில் தமிழர் விடுதலை வாழ்வு பெறுவது விரைவுபட்டு இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெறுவர். எது எவ்வாறு அமையினும் புத்தாயிரம் ஆண்டில் தமிழீழத் தேசத்தை மீள விடுதலை செய்தல் என்ற தமிழீழ மக்களதும் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களதும் உறுதியை யாராலும் அசைக்க முடியாது. எங்கள் மாவீரத் தெய்வங்களின் புனிதமான தன்னிகரில்லாத தியாகங்களின் வலிமையிலும் எங்கள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சத்தியத் தன்மையிலும் எங்கள் தன்னிகரற்ற தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலிலும் விடுதலைப் புலிப் போராளிகளின் பாதுகாப்பிலும் வாழும் தமிழீழ மக்களுக்கும் தேசத்திற்கும் புத்தாயிரமாண்டில் விடுதலை நிச்சயத்திலும் நிச்சயம் என்பது உறுதியிலும் உறுதி. ●





| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

அன்று...

*91ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதலாவது முற்றுகைச் சமரின்போது, பலம் வாய்ந்த எதிரியுடன் போரிடக்கூடிய நவீன போரியல் சாதனங்களை விடுதலைப் புலிகள் பெற்றிருக்கவில்லை. தமது ஆற்றலை, அறிவை, திறமையைப் பயன்படுத்தி, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட போரியல் சாதனங்களையே விடுதலைப் புலிகள் பாவித்தனர்.*





*புல்டோசர் வண்டிகளையும், உழவு இயந்திரங்களையும் கவச வாகனங்களாக வடிவமைத்தனர்.
அவையே சிங்களப்படையின் கடுமையான தாக்குதலில் இருந்து புலியணிகளைக் காத்து, எதிரியின் நிலைவரை புலியணிகள் நகர பாதுகாப்பு வழங்கின.*



*விடுதலைப் புலிகளின் ஆயுதவடிவமைப்புப் பிரிவால் வடிவமைக்கப்பட்டு, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 'பசிலன் 2000' பீரங்கி, அந்தச் சமரில் முக்கிய பங்கு வகித்தது. எதிரியின் வசதிகளோடும், வளங்களோடும், ஆளணிகளோடும் ஒப்பிடும்போது பின்தங்கிய நிலையில் அன்று புலிவீரர்கள் இருந்தபோதும், உலகம் வியக்கின்ற சாதனையை அன்று நிலைநாட்டினர்.*



*முப்பத்தியொரு நாட்கள் பெரும் வரலாற்றுச்சமரே இடம்பெற்றது.
ஆனையிறவுத்தளம் மீதான முற்றுகைச் சண்டையாகவும்..
வெற்றிலைக்கேணியில் தரையிறங்கி ஆனையிறவை மீட்க விரைந்த படையினருடன் நடைபெற்ற நேரடிச் சண்டைகளாகவும் ஆ.க.வெ. இராணுவ நடவடிக்கை இரு பரிமாணங்களில் நடைபெற்றது.
இவ் இராணுவநடவடிக்கையானது, இலங்கைத் தீவில், இரு வெவ்வேறு இராணுவங்கள் உண்டென்பதை உலகிற்கு தெரியப்படுத்தியதுடன், ஆனையிறவுப்படைத்தளம் அகற்றப்படவேண்டியதொன்று என்பது தீர்மானமாகி விட்டதென்பதையும் அன்றே தெரியப்படுத்தியது.*

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆ.க.வெ. இராணுவ நடவடிக்கையில், 604 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். 1500 புலிவீரர்கள் காயமடைந்தனர்.
சிங்களப்படையினர் தரப்பில் 400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1000 பேர் காயமடைந்தனர்.

# ...முற்றுகைக்குள் சிக்கும் ஆனையிறவுப் படைத்தளம்

11-12-1999 அன்று அதிகாலை, ஆனையிறவு இராணுவத்தளத்தை முற்றுகையிடும் குறியுடன், ஓயாதஅலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை, குடாநாட்டுள் அடிக்கத் தொடங்கியது.

ஆனையிறவுப் படைத்தளத்தின் மும்முனையில், விடுதலைப் புலிகளின் படையணிகள் முற்றுகைச் சமரை ஆரம்பித்தனர்.

ஆனையிறவுக்கு வடகிழக்குத் திசையில், வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதிகளில், படகுகளில் தரையிறங்கிய விடுதலைப் புலிகளின் சிறப்புப்படையணிகள், சிங்களப்படையின் நிலைகளைத் தாக்கி, கைப்பற்றிக் கொண்டன. வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ கடற்படை கூட்டுப் படைத்தளத்தைக் கைப்பற்றிக்கொண்டு விரைந்த விடுதலைப் புலிகளின் படையணிகள், 12ம் திகதி புல்லாவெளி இராணுவ முகாமைக் கைப்பற்றிக்கொண்டன.

ஆனையிறவுப் படைத்தளத்தின் தென்பகுதி நிலையான பரந்தன் பகுதிமீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

17ம் திகதி, பரந்தன் பகுதியில் அமைந்திருந்த சிறீலங்காப் படைமுகாம்கள், காவலரண்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. சுமார் 24மணிநேரக் கடும் சண்டையின் பின்னர், பரந்தன்சந்தி உள்ளிட்ட சுற்று வட்டாரத்தையும் விடுதலைப் புலிகள் முற்றாக மீட்டெடுத்தனர்.

ஆனையிறவுப் படைத்தளத்தின் தென்பகுதி பாதுகாப்பு எல்லை மேலும் சுருங்கிக் கொண்டது.

தென்மராட்சிப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் தமது ஆட்டிலறி மோட்டார்த் தாக்குதலைத் தீவிரப்படுத்தினர்.

முற்றுகையின் ஒரு அங்கமாக, 17ம் திகதி கேரதீவில் அமைந்திருந்த கடற்படை முகாமை விடுதலைப் புலிகளின் கொமாண்டோப்படையணி தாக்கி கைப்பற்றிக்கொண்டது. இங்கிருந்த நவீன றாடார் அமைப்பும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

20ம் திகதி, ஆனையிறவின் தென்புறத்தே, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். ஆனையிறவில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தின் 54வது படைப்பிரிவின் 6வது பிரிகேட்டின் தலைமையகம் இயங்கிய பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை முகாம் அழிக்கப்பட்டதில், 54வது படைப்பிரிவின் ஆறாவது பிரிகேட் தலைமையகம் அழிக்கப்பட்டது.

தென்பகுதியால், ஆனையிறவு பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தென்பகுதி பாதுகாப்பு நிலைகளை, அழித்து ஒதுக்கி முன்னேறி, ஒருபடையணி நிலையெடுத்து காத்திருக்க, மறுபுறத்தே, ஆனையிறவின் வடபறத்திலான விநியோகப் பாதையை குறுக்கறுக்க, விடுதலைப் புலிகளின் மற்றைய படையணிகள், நிதானமாக நகர்வுகளை மேற்கொண்டன.

இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதியில், பிரதான பாதையில் இருந்து கிழக்குப்புறத்தே சண்டை நெருங்க ஆரம்பித்தது.

24ம் திகதி, சங்கத்தார்வயல் பகுதியில் கடும் சண்டை நடைபெற்றது.

இதுநாள் வரை.. ஆனையிறவுப் படைத்தளம்மீதான முற்றுகை மேலும் மேலும் இறுகிவருகின்றது. முழுமையான முற்றுகையை எதிர்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் ஆனையிறவுப் பெரும்தளம்.

அதேவேளை, இந்த முற்றுகையை எப்படியாவது முறியடிக்க வேண்டும் என்ற கட்டாயம் சிங்களத்திற்கு.

பல நாட்களாகத் தொடரும் இந்த முற்றுகைச் சமர், சிங்களப்படையினர் மத்தியில் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றது. பெரும் தொகையான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகளுக்கு அள்ளிவழங்கியுள்ளது.

இந்த முற்றுகையை உடைக்க, வலிகாமப் பகுதியில் இருந்து பெருந்தொகை இராணுவத்தையும், ஆயுதங்கள், வெடிபொருட்களை ஆனையிறவுத்தளத்திற்கு சிங்களப் படை அனுப்பிக்கொண்டிருக்கின்றது.

வடமராட்சி கிழக்குப்பகுதிக்கூடாக தென்மராட்சிக்குள் நுளையும் விடுதலைப் புலிகள், அங்கிருந்து அணிகளாக குடாநாட்டுக்குள் முன்னேறக்கூடும் என சிங்களப்படையினர் அச்சப்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் இந்த நகர்வைத் தடுத்துவிடலாம் என்ற நினைப்பில், பளைப் பகுதியில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுவருகின்றனர்.

91ம் ஆண்டு, விடுதலைப் புலிகளின் முற்றுகையை உடைக்க சிங்களப்படையினர், வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கி, பலநாள் மெதுவாக பெரும் இழப்புக்களுடன் நகர்ந்து ஆனையிறவைக் காப்பாற்றிக்கொண்டதுபோல.. இம்முறை இல்லை. தற்போது, நிகழ்வுகள் யாவும் தலைகீழாக நடைபெறுகின்றன.


ஆனையிறவின் பாதுகாப்பிற்கும் கடல்வழி விநியோகத்திற்குமாக 91ம் ஆண்டே அமைக்கப்பட்ட வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டு படைத்தளங்களையே விடுதலைப் புலிகள் முதலில் தாக்கி கைப்பற்றிக்கொண்டனர். ஆனையிறவைக் காக்க, சிங்களப்படை நகர்ந்த திசைவழியே விடுதலைப் புலிகளின் படையணிகள் விரைந்து வருகின்றன.

தற்போது, குடாநாட்டுக்கு, நல்லதண்ணித்தொடுவாய், சுண்டிக்குளம் பகுதியூடாக தரைப்பாதையொன்று திறக்கப்பட்டாகிவிட்டது.

சிங்களத்தின் கடல் தரை அச்சுறுத்தல் இன்றி, விடுதலைப் புலிகளின் படையணிகள் குடாநாட்டுக்குள் சுயாதீனமாக படைநடத்துகையை மேற்கொள்ள முடியும் என்ற நிலைக்கு நிலைமை வந்துள்ளது.

ஆனையிறவு ஒரு முழுமையான முற்றுகைக்குள் அகப்பட்டு, அழிக்கப்படும் நாளுக்காக காத்திருக்கும் அதேவேளை, யாழ்குடாநாடு, எக்கணமும் விடுதலைப் புலிகளின் படையணிகளால் மீட்கப்படும் இனிய காலத்திற்காய் காத்திருக்கின்றது. ■





# தமிழர்களை வதைத்த சிங்கள இராணுவம் தமிழர்களின் "பாஸ்போட்டில்" தப்பியோட்டம்

சிங்கள இராணுவம் தற்போது ஓட்டம் பிடிப்பது இரகசியமான விசயமல்ல. என்றாலும், அவர்கள் எவ்விதமாய், எவ் வழியால் எப்படியெல்லாமோ தப்பியோடு கின்றனர் என்பது பொதுவாக எல்லோருக் கும் தெரிந்திருக்காது.

வன்னிக்காட்டுக்குள், யுத்தநெருக்கடி களுக்குள் இருந்து ஒருவாறு தப்பியோடி, தற்போது அமெரிக்காவில் தஞ்சமடைந் துள்ள முன்னாள் சிறீலங்கா இராணுவத் தினர் சிலர் தெரிவித்த சுவையான சுய அனுபவங்களை இங்கு தருகின்றோம்.

'விடுதலைப் புலிகளுடன் மோதப் பயந்து, வன்னிக்களத்தில் இருந்து, உயிர் தப்பினால் போதும் என்ற நினைப்புடன் அங்கிருந்து தப்பியோடத் தீர்மானித் தோம். தப்பியோடும் தறுவாயில், எமது கட்டளையதிகாரிகளை சமாளிக்க வேண்டிய தாகிவிட்டது. எம்மை தம்பியோட விடுவ தாக இருந்தால், தமக்கு இலஞ்சமாக பணம் தர வேண்டும் என, அவர்கள் நிபந் தனை விதித்தனர்.'

'எங்களில் பலர், அவ்விதமே அதிகாரி களுக்கு இலஞ்சமாகப் பணம் கொடுத்தே தப்பித்து தென்பகுதிக்கு வந்தோம்.'

'இலங்கைத் தமிழர்களின் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தியே, நாங்கள், வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லக் கூடியதாக இருக்கின்றது.'

'பயணமுகவர்களுக்கு பெருந்தொ கைப் பணம் கொடுத்து, தமிழர்களின் கடவுச்சீட்டுக்களிலேயே நாங்கள் இங்கு வந்துள்ளோம்.'

'புத்தபிக்குகளின் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தியும் கொழும்பிலிருந்து தப்பு வோரும் உள்ளனர். எங்களில் சிலர் அவ்விதம்தான், தாய்லாந்து நாட்டுக்குச் சென்று, பின், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்லுகின்றனர்.'

புத்தபிக்குகளின் கடவுச்சீட்டைப் பாவிப் பதால், அவர்களைப் போலவே மொட்டை போட்டுகாவியுடுத்தி,போலிச்சாமியார் களாக, உலவவேண்டியிருக்கின்றது. புத்தபிக்குகள் வேடத்தில், பாங்கொக் நகரில் உலவும் இராணுவத்தினரைக் கண்டு, அங்குள்ள மக்கள் கையெடுத்துக் கும்பிட்டு, தமது மரியாதையைச் செய் கின்றனர். இதனால், இராணுவத் தினர் வெட்கத்தாலும், பயத்தாலும் குமைந்துபோகின்றனர் என்பதுடன், மக் கள் மத்தியில் உலவுவதைத் தவிர்க்க விரும்புகின்றனர்.

வன்னியில் இருந்து தப்பியோடும் இராணுவத்தினர், முதலில் தஞ்சமடையும் நாடாக சிங்கப்பூரைக் கொள்ளுகின்றனர். பொதுவாக அங்கிருந்தே ஏனைய பகுதி களுக்கும் செல்லுகின்றனர்.

சிங்கப்பூரில் இருந்து, சுமார் பத்தாயி ரத்தில் இருந்து பன்னீராயிரம் அமெரிக்க டாலர்கள் கொடுத்தே, பாங்கொக் ஊடாக, பிற நாடுகளுக்குச் சென்று, அகதிகளாக தம்மை பதிவுசெய்துகொள்ளுகின்றனர்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய்கள் சுமார் இரண்டாயிரம் பேர், ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு செல்வதற் காக, தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள னர்.

கனடா போன்ற நாடுகளில் தஞ்ச மடையும் போது, நாம், இலங்கையில் தமிழர்களுக்கு உதவிகள் செய்துவந்த தாகவும், இலங்கை அரசும், இராணு வமும் தங்களைத் தேடுவதாகவும், எனவே எம்மைத் திருப்பிஅனுப்பினால், இராணுவத்தாலோ அரசாலோ கொல்லப் பட்டுவிடுவோம் என, பொய்கூறியே அகதி அந்தஸ்து கோருகின்றோம்.

நாங்கள், தமிழ்மக்களுக்கு எதிராக சண்டை பிடிக்கவேண்டுமென்று, ஒரு போதும் இராணுவத்தில் சேரவில்லை. எங்களில் பலர் வறுமையான குடும்ப நிலை காரணமாகவே இராணுவத்தில் சேர்ந்தோம். இன்னும் சிலர், எமது பகு திகளில் உள்ள, புத்தபிக்குமாரின் நிர்ப் பந்தம் காரணமாக இராணுவத்தில் சேர்ந்தோம்.

வன்னிச் சமருக்கோ அல்லது தமிழ்ப் பிரதேசங்களுக்கு யுத்தத்திற்கோ எம்மை அனுப்புவார்கள் என்று முன்கூட்டியே தெரிந்திருந்தால், இராணுவத்தில் சேர்ந் திருக்கவே மாட்டோம்.

சில இராணுவ அதிகாரிகளும், அர சாங்கமும் தங்களின் சுயலாபத்திற் காகவும், பணம் சம்பாதிக்கவுமே போரை நடத்துகின்றனர்.

இதனைத் தெரிந்துகொண்டு, எம்மைப் போல இன்னும் பலர் இராணுவத்தை விட்டு வெளியேறத் தயாராக உள்ளனர்.

**குறிப்பு-** மேற்படி தமது சுயகதையை வெளியிட்ட மேற்படி முன்னாள் இராணுவத்தினர், ஓயாத அலைகள் மூன்றிற்கு முன்னராக, படையில் இருந்து தப்பியோடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# குண்டுவெடிப்பும்... கண்டுபிடிப்பும் !

சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலு க்கு மூன்று நாட்களுக்கு முன்ன தாக, 18ம் திகதி கொழும்பில் குண்டு வெடித்தது. சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவைக் குறிவைத்து இக்குண்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபை வளாகத்தில் இரவு நடந்த, இறுதிப் பிரச்சாரக்கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, தனது காரில் ஏற தயாரான நிலையில், இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது. சந்திரிகா மயிரிழையில் உயிர் தப்பினார். அவரது வலதுகண்ணில் காயமேற்பட்டது. கொழும்புப்பகுதிக்கான பொலிஸ் உயர் அதிகாரி டி. சில்வா, சந்திரிகாவின் பாதுகாப்புப்படைப்பிரி வைச்சேர்ந்தோர், அவருக்கு நெருக்க மானவர்கள் என, 24 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கும் காயங்களுக்கும் ஆளாகினர்.

இதேபோன்று, அன்றிரவே, எதிர்க் கட்சியின் இறுதிப் பிரச்சாரக்கூட்டம், கொழும்பில் இருந்து சிலமைல் தொலை விலுள்ள யா-எல பகுதியில் நடந்து கொண்டிருந்தது. அங்கும் பாரிய குண்டுவெடிப்பு. வன்னித் தோல்வி களுக்கு ஒருவகையில் காரணமாக இருந்தவர் எனக் குற்றஞ்சாட்டி விசாரிக்கப்பட்ட, முன்னாள் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம உட்பட பதினைந்து பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந் தனர்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, பரவலாக தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்திருந் தன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குற்றங்கள் பதிவாகியிருந்தன. ஐந்து கொலைகள், ஐந்துக்கும் மேற்பட்ட கொலை முயற்சிகள் என, வன்முறையின் காட்சிகளே எங்கும் தெரிந்தன. ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் பரஸ்பரம் எதிரெதிராக குற்றங்களைச் சுமத்தினர். அதிகாரம் இருப்பதால், ஆளும்கட்சிக்கே, வன்முறைகள் புரிவதில் வாய்ப்பு அதிகமாக இருந்துள்ளது.

இந்த நிலையிலேயே, இரண்டு பிரதான கட்சிகளின் கூட்டங்களிலும் குண்டுகள் வெடித்தன.

எதிர்க்கட்சியோ, தனது கூட்டத்தின் மீது, ஆளும்கட்சி ஆதரவாளர்களே குண்டுத் தாக்குதல் நடத்தினர் என பகிரங்கமாக அறிவித்தது.

ஆனால் ஆளும்கட்சியோ, அதனை விடுதலைப் புலிகளின் தலையில் கட்டி விட பெரும்பாடுபட்டது.

புதுக்குடியிருப்பில் பொதுமக்கள் மீது குண்டுவீசி பலரைக் கொன்றொழித்து விட்டு, சரியான இலக்குகளே தாக்கப் பட்டதாக திமிர்த்தனமாய் கதை சொன்ன சந்திரிகா அரசு, பின்னர், மடுமாதா ஆலயத்தின் மீது, பீரங்கித் தாக்குதல் நடத்தி, கோவிலை சேதப்படுத்தி, அங்கு தஞ்சமடைந்திருந்த பொதுமக்களைக் கொன்று குவித்த துடன், இதனை விடுதலைப் புலிகளே செய்தார்கள் என, சாதிக்கமுனைந்தது. இந்தப் பொய்மையின் பாதையிலேயே பயணப்படும் சந்திரிகா, தன்மீதான தாக்குதலையும், எதிர்க்கட்சி மீதான தாக்குதலையும் விடுதலைப் புலி களின் தலையில் கட்டிவிடும் நோக்கில் கதையளந்தார்.

**சரி அதுதான் இருக்கட்டும்...**

இந்தக் குண்டு வெடிப்புக்குறித்து ரணில் என்ன சொல்லுகின்றார்..?

கடந்த வாரம் கொழும்பில், பத்திரி கையாளர் சந்திப்பொன்றை, ரணில் விக்கிரமசிங்கா ஏற்பாடுசெய்திருந்தார். தேர்தல் தோல்விக்குப்பின் முதன் முதலாக பத்திரிகையாளர்கள் ரணிலைச் சந்திக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவேன் என்பது உங்களது முன்னைய நிலைப் பாடு. ஆனால், கொழும்பில் குண்டுகள் வெடித்தபின்பு, தற்போது உங்களது நிலைப்பாடு என்ன? என செய்தியாளர் ஒருவர் கேட்கின்றார்.

எனது நிலையில், மாற்றம் எதுவு மில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என, இப்போதும் தெரிவிக் கின்றேன் என்றார்.

குண்டுகள் வெடிப்பதென்பது... அது போரின் ஒரு பகுதியே என்றார். போர் தொடரும்வரை, குண்டுவெடிப்புக்களும் தொடரவே செய்யும் என்ற ரணில் விக்கிரமசிங்கா... இன்னொரு முக்கிய மான விடயத்தையும் தெரிவித்தார்.

**அதாவது...**

'முல்லைத்தீவில்... குண்டுகளைப் போட்டு தமிழ் மக்களைக் கொல்வதற்கு அரசாங்கம் திட்டமிட்ட போதே... நமக்கான ஆபத்துக்களும் அதிகரித் துள்ளன' என்றார். ■

# வால்ச்சண்டை

சந்திரிகாவிற்கு விசுவாசமாக உழைத்தது யார் என்பதில், ஈ.பி.டி.பி. டக்கிளஸ் தேவானந்தாவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப்பிற்கும் இடையில் பயங்கர மோதல். முன்பும் இதுபோல இழுபறிகள் புடுங்குப்பாடுகள் இருந்தாலும், சந்திரிகா அவற்றையெல்லாம் தீர்த்துவைத்து, இருவரையும் தனக்கருகில் பவ்வியமாக இருக்க பழக்கிவைத்திருந்தார்.


தற்போது தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. சந்திரிகாவின் வெற்றிக்கு யார் காரணம் என்பதே, இரண்டு சந்திரிகா விசுவாசிகளினதும் தற்போதைய விவாதப்பொருளாகியுள்ளது. பகிரங்கமாக ஆயுதங்களைப் பாவிப்பது, அரசியல் நீரோட்டத்தில் கரைந்தவர்களின் பழக்கம் இல்லை ஆதலால், தற்போதைக்கு வாய்த்தர்க்கமே.

அஸ்ரப் சொல்லுகின்றார் தமது கடுமையான முயற்சியால், முஸ்லீம் மக்களிடம் இருந்து பெற்ற வாக்குகளாலேயே சந்திரிகா வென்றார் என்கிறார்.

டக்கிளஸ் தேவானந்தாவோ... இதனைக் கடுமையாக மறுக்கின்றார். யாழ்ப்பாணத்தில் தனது விடாத கடும் முயற்சியால் விழுந்த தமிழ் வாக்கு களாலேயே(?) சந்திரிகா வெற்றி பெற்றார் என்கிறார்.

இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் சந்திரிகா உள்ளூர நினைக்கக்கூடும்...

'நான் உயிரைக்குடுத்து வெண்டிருக்கிறன் நீங்களென்னடாவெண்டால்...' ■









ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களில் 28-12-1999வரை எமக்குக் கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர் விபரம்.

1. **லோகா**
[இராசதுரை – ராகினி, பதுளை]
2. **கல்ப்பனா**
[கதிரமலை –சுதர்ஷினி, மட்டக்களப்பு]
3. **விஜிதா**
[வடிவேலு – சசி, மட்டக்களப்பு]
4. **ஜெயந்தி**
[அருணாசிறி – தவமலர், மட்டக்களப்பு]
5. **கஜந்தா**
[குழந்தைவேல் – சாந்தி, மட்டக்களப்பு]
6. **மதுரகீதன்**
[கிருஷ்ணபிள்ளை– சுதாகரன், மட்டக்களப்பு]
7. **தபோதரன்**
[இராசமாணிக்கம் – சந்திரமோகன், அம்பாறை]
8. **கிருஷாந்தினி**
[கதிர்காமத்தம்பி – காஞ்சனா, மட்டக்களப்பு]
9. **சபேசினி**
[சிதம்பரப்பிள்ளை – யசோதா, மட்டக்களப்பு]
10. **அன்பு**
[கணபதிப்பிள்ளை – உதயசூரி, மட்டக்களப்பு]
11. **யாழ்விழி**
[சண்முகதாசா - நாகேஸ்வரி, திருகோணமலை]
12. **தபேக்கா**
[தர்மலிங்கம் – சுலோசனா, மட்டக்களப்பு]
13. **தேவகி**
[நற்குணசிங்கம் – ஜெயமதி, மட்டக்களப்பு]
14. **மனோன்மணி**
[அரசரட்ணம் – சந்திரமதி, மட்டக்களப்பு]
15. **பேரிலிங்கம்**
[தம்பிரெட்ணம் – ஜெயராசா, மட்டக்களப்பு]
16. **கலாவரதன்**
[கணபதிப்பிள்ளை –பாக்கியராசா, மட்டக்களப்பு]
17. **பாவீரநாதன்**
[சோமானந்த பிள்ளை – சத்தியானந்தன், மட்டக்களப்பு]
18. **கமலி**
[செல்வநாயகம் –தங்கமலர், மட்டக்களப்பு]
19. **மாருதி**
[சந்தோசிம்– வவி, மட்டக்களப்பு]
20. **சுதாஜினி**
[பிள்ளையான்– அன்னபாக்கியம், மட்டக்களப்பு]
21. **சாந்தி**
[பத்மநாதன் – சுதந்திரா, மட்டக்களப்பு]
22. **கேசவன்**
[ தியாகராசா – பிரவீண்குமார், யாழ்ப்பாணம்]
23. **தாமரை**
[நாகரெட்ணம் – காஞ்சனா, நெடுங்கேணி]
24. **இசைச்செல்வி**
[நவரெட்ணம்– நகுலா, யாழ்ப்பாணம்]
25. **நேசகுமார்**
[சித்திரவேல் – தேவராசா, திருகோணமலை]
26. **துளசி**
[கந்தசாமி – கமலேஸ்வரன், இயக்கச்சி]
27. **ஜீவயோதியவன்**
[கணேஷ் – ரதீஷ்வரன், அம்பாறை]
28. **குணவேலன்**
[முருகுப்பிள்ளை – குலேந்திரராசா, மட்டக்களப்பு]
29. **சிவசங்கர்**
[தங்கராசா – சர்வானந்தம், திருகோணமலை]
30. **ரவி அப்பா**
[முனியாண்டி மதியழகன், மன்னார்]
31. **பாவண்ணன்**
[ கதிரவேற்பிள்ளை ஜெயகாந்தன், யாழ்ப்பாணம்]
32. **கேஸ்வரன் அல்லது தமிழ் நெஞ்சன்**
[ வல்லிபுரம் இராஜேந்திரன், மட்டக்களப்பு]
33. **இன்னரசி**
[ கந்தசாமி சேதுமதி, யாழ்ப்பாணம்]
34. **சிவமோகன்**
[ சதாசிவம் கிருபாகரன், மட்டக்களப்பு]
34. **அகிலநாதன்**
[ வேல்முருகு சபாநாயகம், மட்டக்களப்பு]
34. **நல்லநந்தன்**
[ அந்தோனி செல்வநாயகம், கிளிநொச்சி]
35. **ஈழத்தரசன்**
[ முருகையா கேதீஸ்வரன், கிளிநொச்சி]
36. **ஆராதனா**
[ பாலசுப்பிரமணியம் சந்திரவதனி, பூநகரி]
37. **காஞ்சினி**
[ சுப்பிரமணியம் அன்னலக்சுமி, மட்டக்களப்பு]
38. **வான்மதி**
[ சிவசுப்பிரமணியம் மாக்கிரட் நிவேதிகா, யாழ்ப்பாணம்]
39. **கோசலா**
[ வேல்மணி செல்வமலர், அம்பாறை]
40. **காந்தருபன்**
[கந்தசாமி சதீஸ்குமார், மட்டக்களப்பு ]
41. **காதம்பரி**
[ விக்டர் அற்புதநாயகி, யாழ்ப்பாணம்]
42. **பாரதி அல்லது இன்பன்**
[ குலசேகரம் குகன், யாழ்ப்பாணம்]
43. **வாணன்**
[ விக்னேஸ்வரன் அஜந்தன், மல்லாவி]
44. **புனிதன் அல்லது புமிலன்**
[ நாகரெத்தினம் கஜன், யாழ்ப்பாணம்]

ஓயாத அலைகள் - 3 இராணுவ நடவடிக்கைகளில் வன்னியின் வடதிசையில் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த நான்கு மாவீரர்களின் விபரம்.

1. **கப்ரன் தயாபரன்**
[ தேவதாஸ் சிவகுமார், திருகோணமலை]
2. **கப்ரன் சிவேதன் அல்லது அறிஞன்**
[கிருஷ்ணசாமி இருதயமூர்த்தி, மாத்தளை]
3. **2ம். லெப். புயல் வீரன்**
[மோசஸ் வரதராஜா, வவுனியா]
4. **மலையப்பன்**
[ கந்தையா சந்திரசேகர், யாழ்ப்பாணம்]

இந்த நடவடிக்கையின் போது தொண்டர் படையைச் சேர்ந்த 7பேர் உயிரிழந்தனர். அவர்களது விபரம்.

1. **கேசவன் - சிவராசா**
[உடையார்கட்டு]
2. **நடராசா - குலேந்திரன்**
[யாழ்ப்பாணம்]
3. **நாச்சிமுத்து - நேசையா**
[கிளிநொச்சி]
4. **ஜெயராசா - ஜெயக்காந்தன்**
[யாழ்ப்பாணம்]
5. **சோமசுந்தரம் - பிரபாகரன்**
[உடையார்கட்டு]
6. **யோகராசா - நிஷாந்தகுமார்**
[யாழ்ப்பாணம்]
7. **மகாலிங்கம் - ஜசிகாந்தன்**
[யாழ்ப்பாணம்]

மாவீரர்களான எல்லைப்படை வீரர்கள் .

1. **சதாசிவம் - மகாகுமணன் அல்லது நாயன்**
[ புதுக்குடியிருப்பு]
2. **தங்கராசா - தவராசா**
[ புதுக்குடியிருப்பு]
3. **பிள்ளையான் - சந்திரன்**
[ மட்டக்களப்பு]

கடந்த வியாழன் 23.12.1999 அன்று ஆனையிறவுப் பகுதியில் இடம் பெற்ற சண்டையில் வீரச்சவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் விபரம்.

1. **மேஜர் கதிரொளி**
[ தனபாலசிங்கம் – சுஜீவன், கொக்குத்தொடுவாய்]
2. **கப்ரன் தமிழ்வேந்தன்**
[ பாலசிங்கம் – வசந்தன், வவுனியா]
3. **கப்ரன் புரட்சி**
[ இராமசாமி – செல்வராசா, மன்னார்]
4. **பாணன்**
[ சன்னாசி – நாகராஜா, வட்டக்கச்சி]
5. **வராகமூர்த்தி**
[ நாகையா – ஜீவநாதன், மட்டக்களப்பு]
6. **வாகரையன்**
[ மயில்வாகனம் – கிருபைநாயகம், யாழ்ப்பாணம்]
7. **சிங்காதரன்**
[ பரசுராமன் – மயூரதன் , மட்டக்களப்பு]
8. **தில்லைக்குமார்**
[ தம்பிராஜா – பேரின்பநாயகம், யாழ்ப்பாணம்]
9. **பேரின்பம்**
[ முத்துக்குமாரசாமி – மகாசிவநாராயணன், யாழ்ப்பாணம்]
10. **கலைப்புரலவன்**
[ தர்மலிங்கம் – வரதன், யாழ்ப்பாணம்]

கடந்த 22.12 அன்று மூதூர் பகுதியில் நடை பெற்ற மோதலில்

1. **அன்பன்**
[ திருநாவுக்கரசர் – உதயகுமார், திருகோணமலை]
2. **வானதி**
[ மாணிக்கராசா – துஷாந்தினி, திருகோணமலை]

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலிகள்

05 .11.1999 அன்று நெடுங்கேணியில்
1. **கரும்புலி மேஜர் சசி**
[நாகரெத்தினம் சுகந்தினி, யாழ்ப்பாணம்]
2. **கரும்புலி மேஜர் அருளன்**
[நந்த கோபாலன் துஷ்யந்தன், யாழ்ப்பாணம்]
3. **லெப்டினன்ட் பரண்**
[விநாயக மூர்த்தி கேதீஸ்வரன், திருகோணமலை]

7 .11.1999 அன்று புதூர்ப்பகுதியில்
4. **கப்ரன் பதஞ்சலி**
[சிதம்பரப்பிள்ளை சுமித்திரா, கிளிநொச்சி]

23.12.1999 அன்று ஆனையிறவில்
5. **கரும்புலி, மேஜர்.செழியன்**
[ மகேந்திரராஜா – பாலமுரளி, யாழ்]

# சிங்களத்தின் தேர்வு: போர்

## போர், இனஅழிப்பு கோசத்துடன் வெற்றிபெற்ற சந்திரிகா!

சிறீலங்காவின் ஆறாவது சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சந்திரிகா குமாரதுங்க இனக்குரோதம் - போர் என்ற தளங்களில் நின்றவாறு தனது பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டுள்ளார். வன்முறைகளும் மோசடியும் நிறைந்த தேர்தலின் முடிவில் போரையே பகிரங்க இலக்காகக் கொண்ட சந்திரிகா ஐம்பத்தொரு சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

தேர்தலிற்கு முந்தையநாள் சிங்கள தேசிய ..தொலைக்காட்சியில் தோன்றிய சந்திரிகா பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாகவும் தமிழர்கள் புலிகளை விலக்கி வைக்கவேண்டும், இல்லாது விட்டால் அழித்தொழிக்கப்படுவார்கள் எனவும் எச்சரித்தார். இவ் எச்சரிக்கையானது நேரடியான இனக்குரோதத்தை வெளிக்காட்டியதுடன் தமிழர்களின் உரிமைக்கான நேர்மையான போராட்டத்தை பூண்டோடு ஒழிப்போம் என்ற பேரினவாத பொதுக்கருத்தை வெளிக்காட்டியது.



மறுபுறம் இனச்சிக்கல் தொடர்பாக பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் எனவும் புலிகளுடன் சர்வதேச மத்தியத்துவத்துடன் பேசலாம் எனவும் கூறி ரனில் விக்கரமசிங்கவின் ஐ.தே.க வாக்குக்களைக் கேட்டது.

ஆனால் சிங்கள தேசம் சந்திரிகா குமாரதுங்காவின் போர்க்குரலுக்கு வாக்குகளை வழங்கியது. பிரதேச மக்கள் தமது வாக்குக்களை சந்திரிகா எதிர்ப்புடன் ரனிலுக்கு வழங்கிய போதும் சிங்கள பெரும்பான்மையின் அதீதமான ஆதரவு போரையும் இனஅழிப்பையும் ஆதரித்து ஆட்சிக்கு தேர்வு செய்தது.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் தாக்கத்திற்கு உட்பட்டு சிதைந்து வரும் இராணுவ பின்னணியில் இத் தேர்தலை சிங்களம் எதிர்கொண்டது. கடுமையான தணிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் தமது படைகள் பலநூறு புலிகளை கொன்றது போன்ற பொய் அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டன. இது சிங்கள வாக்காளர்கள் மத்தியில் சந்திரிகாவின் போர் பற்றிய பிரமாண்டமான பேச்சுக்களுக்கு பலம் கொடுத்தது. வன்னித் தோல்விகள் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் உதவியுடன் இடம்பெற்றதாக சந்திரிகா பகிரங்கமாக குற்றம் சாட்டி இராணுவ பேரழிவுகளை அரசியல் அசிங்கமாக்கி தமது இராணுவ தோல்விகளை மூடி மறைத்தார்.

ஈற்றில் கொழும்பில்இடம் பெற்ற குண்டுவெடிப்பை தனது பேரினவாத பரப்புரைகளுக்கான ஆயுதமாக்கி, இனவாதத் தளத்தில் நின்றவாறு அடுத்த சனதிபதியாக சந்திரிகா தேர்வாகியுள்ளார்.

தனது பதவியேற்பு உரையில் தமிழர்களின் உரிமைப் போரை தன்னால் இயலுமான அளவில் பயங்கரவாதம் என சாடினார். தமிழர்களை எச்சரித்தார். புலிகளை அழிப்பேன் என கோடிட்டுக் காட்டினார். தன்னையும் தான் பெற்ற காயங்களையும் இனக்குரோதத்தை தட்டியெழுப்பும் ஆயுதமாகப் பயன்படுத்தினார்.

கடந்த தேர்தலில் சமாதானத்தைக் காண்பேன் எனக் கூறி தேர்வாகி போரை சமாதானம் என்ற போர்வையில் நடாத்திய சந்திரிகா இம்முறை போரினைத் தொடர வாக்குகளைப் பெற்று இனக்குரோதத்தை அள்ளி வீசியமை தமிழர்களின் விடுதலைப் போரை தார்மீகரீதியாகப் பலப்படுத்தியுள்ளது. சிங்கள தேசத்துடன் தமிழீழம் ஏன் இணைந்து வாழமுடியாது என்பதற்கு சந்திரிகாவின் தேர்வு ஒரு மறுக்க முடியாத ஆதாரம் ஆகும். மறுபுறம், போர்முனையில் தமிழர்கள் பெற்றுக்கொள்ளும் பலமும் நிலமீட்புமே உண்மையான அமைதியையும் உரிமைகளையும் தரும்.

நாதன்

# எச்சரிக்கப்பட்ட தமிழர்கள்!

## தமிழர்களை குற்றவாளிகளாக நிறுத்தி சந்திரிகா விடுத்த எச்சரிக்கை

சிங்கள இனவாதத்தின் கொடிய போர்த்தேவதையாக உருவாகியிருக்கும் சந்திரிகா குமாரதுங்க தன் பதவியேற்பு உரையை தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியத்தை மோசமாக தாக்குவதற்கான உரையாவும் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியின் போரைத் தொடர்வதற்கான பிரகடனமாகவும் பயன்படுத்தினார்.

தமிழ் மக்களை இரண்டாம் தர குற்றம் புரிந்த மக்களாக பாவனை செய்து சிங்கள மேலாதிக்க துரைத்தனத்துடன் உரையை நிகழ்த்திய சந்திரிகா அமைதிவழி மூலம் தீர்வு காண்பதற்கான சாத்தியமான வழிகளை அடைப்பதில் தீவிர அக்கறை செலுத்தினார்.

தமிழ் மக்கள் புலிகளை ஆதரித்தமையை பெரும் குற்றமாகவும் அதனை தான் மன்னிக்க தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் பிரபாகரனை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் அப்போதுதான் அமைதி ஒளியைக் காண்பீர்கள் என அச்சுறுத்தினார். தனது பகிரங்கமான இனவெறிக்கு முகமூடி இடுவதற்காக தமிழ் மக்கள் பிரபாகரனை பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் புலிகள் ஆயுதப் போரைக் கைவிட்டுவிட தமிழ் மக்கள் பாடுபட வேண்டும் எனவும் அவர் கூறினார். இவ் வேண்டுதலானது தமிழ் மக்களை குற்றவாளிகளாக்க தேவையான நியாயத்தை தேடுவதாக இருந்தது. தமிழ் மக்களே புலிகளை தாங்கி நிற்கின்றார்கள் என்ற இயல்பான உண்மையை திருப்பிப் போட்டு புலிகளை அழிப்பதே சிங்கள தேசத்தின் இலட்சியம் - அதற்கு தமிழர்கள் துணைபோக வேண்டும் அல்லது நடப்பதைப் பார் என அம்மையார் கூறுகின்றார்.

டிசம்பர் 18ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தான் உயிர்தப்பியதை ஒரு தேசிய அதிசயம் எனக் கூறும் சந்திரிகா தனது உரையின் பெரும்பாகத்தை தன் மீதான தாக்குதலின் விளைவுகள் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கானது எனச் சொல்வதில் செலவிட்டார். தான் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்கப்போவதாகவும், சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்காவை எவரும் ஒன்றுமே செய்ய முடியாது என வீரமுழக்கமிட்டதுடன் எமது தேசிய தலைமையை இயலுமான வார்த்தைகளால் அவதூறு செய்ய முற்பட்டார்.

தனது உரையின் எக்கட்டத்திலும் அமைதிவழி மூலம் பேச்சுக்களை ஆரம்பித்து தீர்வு காண்பது பற்றி சந்திரிகா பேசவில்லை. தீவிர சிங்கள இனவாத அமைப்புக்களின் பாணியில் இனச்சிக்கலை பயங்கரவாதம் எனவும் அதனை ஒழிப்பதே நாட்டின் ஒரே நோக்கம் எனவும் சந்திரிகாவால் கூறப்பட்டது.

சந்திரிகாவின் தேர்வு போரை மையமாகக் கொண்ட இனவாத ஆதரவுத் தளத்தைக் கொண்டுள்ள வேளையில் சிங்கள மக்களை போரின்பால் வைத்திருக்கவும் போரின் சுமைகளை ஏற்கும் தரப்பான அடிமட்ட மக்களையும் தமிழ் இன வெறுப்புக்குள் வைத்திருக்கவும் சந்திரிகா இவ்வுரையை பயன்படுத்தியுள்ளார்.


எமது தேசியத் தலைவர் தனது உரைகளில் இனம்காட்டி வந்த சந்திரிகாவின் கொடூர இனவாத முகத்தை சந்திரிகா மீள தெளிவாக இனம் காட்டியுள்ளார். இது உலக வரலாற்றுப் போக்கில் இயல்பானதும்கூட. மோசமான இனவாத சக்திகள் இத்தகைய வன்முறை கலந்த இறுமாப்பை எப்போதும் இலகுவில் கைவிட்டதில்லை. நசுக்கப்பட்ட மக்களின் எழுச்சி இவ்வாறான இராணுவ இறுமாப்புக் கலந்த ஆதிக்க எண்ணத்தை சிதைக்கும்போது இவர்கள் தண்டிக்கப்படுவார்கள். வரலாறு இத்தகைய இனவெறியர்களை எப்போதும் தண்டித்தே வந்துள்ளது.

# தென் தமிழீழத்தில் மாவீரர் தின விழா



மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இல்லாத மேற்குப் பிரதேசத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள் தோறும் இருமருங்கிலும் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்களிலான கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளில் பதாகைகளும், வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டுகளைப் போல் இல்லாது இம்முறை மாவீரர் தினத்தைச் சிறப்பிக்கப் பொதுமக்கள் , பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் முன்னின்று உழைத்ததைக் கூடுதலாக அவதானிக்க முடிந்தது.


மட்டக்களப்பு மாவட்டத்திலே தரவை மற்றும் தாண்டியடியில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. துவக்க நாளன்று அதாவது 25.11.99 அன்று தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் காலை 9 மணியளவில் தமிழீழத் தேசியக் கொடியை மட்டு – அம்பாறை மாவட்ட விசேட தளபதி நாகேஷ் அவர்கள் ஏற்றி நிகழ்வுகளைத் துவக்கினார். அதனைத் தொடர்ந்து



தமிழீழ விடுதலைப் போரில் இதுகாலவரையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்கும், மற்றும் உயிரிழந்த பொது மக்களுக்குமாக 2 நிமிட நேரம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து போராளிகள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தோரும், பொதுமக்களும் பான்ட் வாத்திய இசையோடும், அணிவகுப்பு மரியாதையோடும் மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் அழைத்து வரப்பட்டனர். அங்கு இந்த நிகழ்வுகள் நிறைவுபெற துயிலும் இல்லத்திற்கு அணிவகுப்பு மரியாதையோடு மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். மட்டு – அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு பகுதி மாவீரர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்த நினைவாலயத்தை மட்டு – அம்பாறை மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி சீதா அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அந்த நினைவாலயத்தில் ஈகைச் சுடரினை மட்டு – அம்பாறை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு அரிதாஸ் அவர்கள் ஏற்றி வைத்தனர்.


மாவீரர் தின நிகழ்வை முன்னிட்டு இராணுவ ஆக்கிரமிப்பில்லாத பகுதிகளுக்கு இராணுவ ஆக்கிரமிப்பில் வாழும் மக்கள் செல்வதனை சிங்களப்படை தடை செய்தது. கிரான் பாலம் ஊடான பாதை, செங்கலடி கறுப்புப் பாலம் ஊடான பாதை, அப்பிலாந்துறை ஊடான பாதை, பட்டி ருப்புப் பாலமூடான பாதைகளில் கடும் இறுக்கம் நிலவியது. இருந்த போதிலும் வேறு பாதைகளினூடாக மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு, மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்ளவந்த மக்கள் இயற்கையின் நெருக்கடி ஒருபக்கமும் சிங்களப் படையின் நெருக்கடி ஒருபக்கமுமாக சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவர்கள் மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும், மாவீரரான உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர்.

இன்னு மொன்றையும் இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது தரவைப் பிரதேசத்தில் நண்பகல் வேளைகளில் ஒரு தடவையும், பிற்பகல் ஒரு தடவையுமாக இரண்டு தடவைகள் கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் சுற்றின.



ஆனால் விமானத் தாக்குதல் நடைபெறும் என மக்கள் எண்ணிய போதிலும் அவர்கள் அச்சம் கொள்ளவில்லை. ஓடவில்லை, பாதுகாப்பும் தேடிக்கொள்ளவில்லை. இதனை அங்கே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தெய்வாதீனமாக மக்கள் எதிர்பார்த்தபடி அந்த கிபீர் விமானம் குண்டுத் தாக்குதல் எதனையும் நிகழ்த்தவில்லை.

இதேவேளை, கடந்த 27.11.99 அன்று மாவீரர் தின இறுதி நிகழ்வை அடுத்து இரவு 10 மணியளவில் தரவை "ராஜா, ரவி" கலையரங்கில் விடுதலைப் புலிகளின் ரசிகன் இசைக்குழுவினர் இன்னிசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினர். ஏராளமான மக்கள் இதனைக் கண்டு களித்தனர். விடுதலை கீதங்கள் பலவற்றை இன்னிசையுடன் ரசிகன் இசைக்குழு வழங்கியது. இசை நிகழ்ச்சியின் இடையே போராளிகளது நாடகம், நாட்டிய நாடகம், கவிதைகளும் இடம் பெற்றன. போராட்டத் தியாகங்களையும், போராட்ட சாதனைகளையும், போராட்ட இலக்குகளையும் தெளிவாக எடுத்துக் கூறும் கலை நிகழ்வுகளாக அவை அமைக்கப்பட்டு இருந்தன.



# வியட்னாமிய மக்கள் படை போல் தமிழர் சேனையும் பெருகும் போது...

கே. பி. றெஜி

எமது தாயக விடுதலைப் போராட்டத்தின் இறுதித் தளமாகவும், களமாகவும், வன்னிப்போர் அரங்கு ஆகிவிட்ட நிலையில் எந்த நிலையிலும் எதிரியின் திட்டத்தை முறியடிக்கும் விதமான ஏற்பாடுகளில் தமிழர் சேனை தயார்படுத்தப் பட்டுள்ளது. குடாநாட்டிற்கான அங்குள்ள சிங்களப் படைகளிற்கு எவ்வாறு தரை வழியான ஓர் இராணுவ விநியோகப் பாதையினை திறக்கலாம் என்று சிங்களப் படைத்தலைமை பாதைகளைத் தேடிக் கொண்டு இருக்கிறது. எல்லா நோக்கங்களையும் கைவிட்டு இறுதியாக வன்னியிலும், குடாநாட்டிலும், குவிக்கப்பட்டிருக்கும் படைகளிற்கு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிங்களப் படைத்தலைமையின் வேலையாகிவிட்ட நிலையில் தமிழ் மக்களை மென்மேலும் எவ்வாறு துன்புறுத்தி அடிபணிய வைக்கலாம் என்பதும் சிங்கள அரசின் சிந்தனையாகிவிட்டது. "பாதை திறப்பு" என்ற கதைகள் இன்று மக்கள் மத்தியில் பிரபல்யமாகிவிட்டது. வன்னி மக்களிற்கான விநியோகம் என்ற பெயரில் பாதைகளை திறந்து பின்னர் அதன் வழி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு உணவு விநியோகத்தை சிறிது காலம் நிறுத்துவதும் பின்பு வேறொருபாதை திறப்பிற்கு பேச்சுவார்த்தை என காலத்தை இழுத்தடிப்பதும் வழமையான செயலாகி விட்ட நிலையில் இன்று இறுதிக்கட்டமாக கண்டிவீதி வழியான பாதை திறப்பிற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் அனுமதியளிக்கப்பட்டபோதும் அரசு அதனை ஏற்றுக் கொள்ளாது பல்வேறு நிபந்தனைகளை விதித்து விடுதலைப் புலிகள் மீது பழியை சுமத்தி இழுத்தடித்து வருகின்றது. மனிதாபிமான அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், அனைத்திற்கும் தன்னை மனிதாபிமானிகள் எனக் காட்டிக்கொண்டு திட்டமிட்டு தமிழ் மக்களிற்கான உணவு, மருந்து தடையினை அமுல்படுத்தி வருகின்றது. இதுவே பாதை திறப்பு இழுத்தடிப்பிற்கான யதார்த்தமான காரணமாகும். இதனைவிட எத்தனை எத்தனை ஆக்கிரமிப்பு தந்திரோபாயங்களை சிங்கள அரசு செய்வதற்கு துணிந்து நிற்கிறது என்பதனை மக்கள் அறிவர். அவை அனைத்திற்கும் எதிராக மக்கள் உறுதியுடன் போராடி எமது இலட்சியத்தை அடைவதற்கான பணிமக்கள் சேனைக்கும் ஏற்பட்டுள்ளது. அத்தகைய செயற்பாட்டை செயற்படுத்த முனையும் வேளை இதே போன்ற மக்கள் படைகள் எவ்வாறு போராட்டங்கள் நடத்தியது என்பதற்கு அன்றைய வியட்னாமிய மக்கள் படையை எம்முடன் அழைத்துக்கொள்வோம். ஒவ்வொரு குடிமகனும் தன்னை போராளியாக மாற்றி தான் நிற்கும் இடத்தை இறுதித் தளமாக அமைத்து தனது வீட்டினையும் வேலைத் தளங்களையும் பாசறையாக்கி தமது வீதிகள், பாலங்கள், சந்திகள் எல்லாவற்றையும் காப்பரண்களாக்கி இருக்கின்ற ஆயுதங்களால் எதிரிகளைத் தாக்கி அழித்து வெற்றி பெற்ற மக்கள்தான் இந்த ஹோசிமின் தலைமையிலான வியாட்னாமிய மக்கள் படை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அத்தகைய நிலையில் இதுவரை சிந்தித்து போராட்டத்திற்கு முழுமையாக அணி திரளா தாமதம்ஆனதால்நூற்றுக்கணக்கான அழகிய வளம் பொருந்திய கிராமங்கள் எதிரியிடம் சென்றன. வியட்னாமிய மக்கள் தமது கிராமங்களை எதிரியிடம் விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. ஊர்ப்படை, பிரதேசப்படை, குடியியல்படை என படைகளை அமைத்து போராடினார்கள். நாங்கள் எமது நிரந்தரப்படை மூலம் தான் எமது போராட்டத்தை செய்து வந்துள்ளோம். எனினும் வியட்னாமிய மக்களைப் போல் தமிழ்மக்கள் போராடவேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கான கட்டளை வரலாற்றினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரலாற்றிற்கு தலைமை தாங்கும் எமதுதலைவர்அதனைஉருவகித்துசெயற்படுத்திக்கொண்டு இருக்கின்றார். வன்னிப் பிரதேசம் எமது இறுதித் தளம். இங்கு வாழும் ஒவ்வொரு தமிழனும் தனது இறுதிக் கடமையினை செய்யத் தயாராகிக் கொண்டு இருக்கிறான். கிராமங்கள், நகரங்கள், பிரதேசங்கள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், பணிசெய்நிறுவனங்கள் அனைத்தும் போர்ப் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

வியட்நாமிய மக்கள் பொருளாதார ரீதியாக பின் தங்கியவர்களாக இருந்த போதும் தம்மாலான இயன்றளவு பங்களிப்பை ஒன்று திரட்டி நவீன வசதி கொண்ட பெரும் படையணியுடன் (யப்பான், பிரான்ஸ், அமெரிக்கா) ஒன்றுபட்டு போரிட்டு வெற்றி பெற்றனர். தலைவர் பிரபாகரனின் படைகளும் இந்தியா, சிறீலங்கா ஆகிய நவீன இராணுவ வசதி கொண்ட படையுடன் மோதி வெற்றி பெற்றது. பெறப்போகின்றது. தவிர அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலும் உறுதி தளராது மக்கள் உணர்வுடன் செயற்படுவது ஒட்டுமொத்தமாக ஓர் தேசிய



எழுச்சியினை செய்வதற்கான தயார்ப்படுத்தலாகவே தெரிகிறது. 1941ஆம் ஆண்டு காலப்பகுதியில் வியட்நாமில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலப் பகுதியில்தான் விடுதலைப் போரை மக்கள் மயப்படுத்தல் என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு ஒவ்வொரு குடிமகனும் போராளியாகும் மரபு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து மக்களையும் ஆயுத பாணிகளாக்குவது என்ற திட்டத்தில் நாடளாவிய ரீதியில் ஒன்று திரட்டப்பட்ட மக்கள் குடிப்படைகள், கொரில்லாப் படைகள், தற்கொலைப் படைகள் என்ற வகையில் வகைப்படுத்தப்பட்டன. தமிழர் சேனையும் இத்தகைய நிலைக்கு வருவதற்கு களை கட்டி நிற்கிறது. தற்காப்பு பயிற்சி பெற்ற அணிகள் உருவாகத் தொடங்கிவிட்டன. கிராமங்களையும், எல்லைகளையும் காக்க என மக்கள் சேனைக்குள் இருந்து எழத் தொடங்கிவிட்டன. அனைத்து மக்களும் பங்கு பெறுகின்ற ஒரு தேசிய பாதுகாப்பிற்கான ஆயுதப்படை ஒன்று சேர்க்கப் படும்போது எந்த வகையான எதிரியின் தாக்குதல்களையும் முறியடிக்க முடியும் என்பதே யதார்த்தம். வியட்னாமில் அனைத்து அரசியல் வேலைத்திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஆயுத மயப் படுத்தப்பட்டன. அந்த வகையிலேயே தமிழ் மக்களும் தாம் செய்து வந்த அரசியல் ரீதியான எதிர்ப்புணர்வு எழுச்சி நடவடிக்கைகளை இன்று ஆயுதமயப் படுத்தப்பட்டு தேசம் முழுவதும் எழுச்சி பெற்று புதுப் பொலிவுடன் விளங்குகின்றது.

1946ஆம் ஆண்டு நாடு தழுவிய யுத்தம் வெடித்தது. வியட்நாமில் 1954 ஆம் ஆண்டு தியன் பியன் பூ முற்றுகைச் சமர் ஆரம்பிக்கப்பட்டது. 1250 கிலோ மீற்றர் நீளமான காட்டுப் பாதை ஊடாக வழங்கல் பணியினை மேற்கொள்வதற்காக காடுகளை வெட்டி பாதை எடுத்து சகல வகையான வழங்கல் நடவடிக்கைகளை வியட்நாம் மக்களின் கிராமிய படைகள் மேற்கொண்டன. ஆயுதங்கள், வெடிபொருட்கள், முற்றுகைக்கான காவல் நடவடிக்கை தொடர்பான வேலைகளை தற்காப்புப் படைகள் மேற்கொண்டன. போரிடும் தற்காப்புப் படைகள் முற்றுகையினைத் தொடங்கி சண்டையினைத் தொடங்கினர். வரலாற்று திருப்பு முனையாக அமைந்துவிட்ட இறுதிச் சமரில் முற்று முழுதான விநியோகப் பணியினை மக்களே பொறுப்பெடுத்துச் செய்தனர். 1954 பங்குனி மாதம் தொடங்கிய சமர் அதே ஆண்டில் ஆடி மாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மூவாயிரம் படைகள் கொல்லப்பட்டும் எண்ணாயிரம் படை சிறைப்படுத்தப்பட்டனர்.

எமது தலைவரும் போராளிகளும் அத்தகைய சமரைப்போல் பலவற்றைக் குறுங்காலத்தில் செய்துமுடித்து தமிழருக்கும் தமிழர் சேனைக்கும் பெருமையினைச் சேர்த்துள்ளது. ஆனால், முற்றுமுழுதான சிங்களப்படைக்கு எதிரான இறுதிச் சமரினை இன்னும் தொடங்கவில்லை. மக்கள் சமரின் ஒரு பகுதி வேலைத் திட்டத்தினை பொறுப்பெடுத்துச் செய்யும் சமர் இன்னும் நடக்கவில்லை. இத்தகைய நிலை விரைவில் வரப்போகின்றது. மக்கள் சேனை அதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.



அடுத்த கட்டமாக வியட்னாமின் குடிப் படைகள், தற்காப்பு படைகள், பிரதேசப் படைகள் எல்லாம் ஒன்றிணைந்து அமெரிக்க நவீனரக விமானப்படையின் தாக்குதல்களை முறியடித்தன. நாடு, நகரம், வீடு, வயல் எல்லாமே அமெரிக்க படைகளிற்கு எதிராக போராடியது. இறுதியில் 57000 படையினை பலிகொடுத்து விட்டு வியட்னாம் மக்கள் சேனையின் தாக்குதல்களை எதிர்த்து நிற்க முடியாது அமெரிக்க படைகள் ஓட்டம் எடுத்தன. தமிழீழத்திலும் இந்தியப்படைகளிற்கு எதிராக எமது நாடு, நகரம், வீடு, காடு எல்லாமே போராடி எமது தலைவர் அவர்களின் தலைமையில் எமது நிரந்தரப் படையால் தோற்கடிக்கப்பட்டது தெரிந்ததே. அவ்வாறே தற்போதும் அதிநவீன வசதி கொண்ட சிங்கள தேசத்தின் விமானப்படை, கடற்படை, தரைப்படைக்கு எதிராக தமிழர் சேனையின் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியன மோதுகின்றன. ஆனால் மக்கள் சேனை இன்னமும் பாரிய சமர்களில் பங்கு பற்றவில்லை. ஆனால் அதற்கு தம்மை தயார்படுத்திக் கொண்டு நிற்கின்றனர்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# நூற்றாண்டுக் கனவு புத்தாயிரத்தில் நனவாகப் போகின்றது

இருபத்தியோராம் நூற்றாண்டில் கால் வைக்கின்ற இந்த நேரத்தில் இருபதாம் நூற்றாண்டு தமிழீழ மக்களுக்கு எப்படிய மைந்திருந்தது என்பதை சுருக்கமாக எடுத்து நோக்குவது 2000ஆம் ஆண்டில் தமிழீழ மக்கள் வாழ்வு சுதந்திர வாழ்வாக வளம் பெறுவதற்கு உதவும் செயற்பாடாக அமையும்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழீழ மக்கள் நுழைந்த பொழுது அவர்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்தனர். தனியரசாகத் திகழ்ந்து 1621 இல் போர்த்துக்கேயரினால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாண அரசும் சிற்றரசாக விளங்கி 1832இல் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட வன்னிச் சிற்றரசும் தமிழீழ மக்களின் தனியான இறைமையுள்ள அரசுகள். பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 1833இல் இந்த தமிழீழத் தனியரசுகளை சிங்கள அரசுக்களுடன் தமது நிர்வாகத் தேவைகளுக்காக இணைத்து இலங்கை அரசாங்கம் என்ற செயற்கையான ஒற்றையாட்சி அலகொன்றை உருவாக்கியிருந்தது. காலனித்துவ பிரித்தானிய அரசாங்கத்தால் வலுக்கட்டாயமாக தமிழ் சிங்கள தேச இனங்களின் எல்லைகளைத்தான் இணைக்க முடிந்ததே தவிர இந்த இரு தேச இனங்களும் இணைந்த பல்லின சமுதாயம் ஒன்றை உருவாக்க அவர்களாலும் முடியவில்லை. இதனை 1879ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22ஆம் நாள் வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சேர். பொன்னம்பலம் இராமநாதனை தமிழர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து ஆறுமுகநாவலர் ஆற்றிய உரையிலேயே `சட்டசபையிலே எமது பிரதிநிதியாக அமைபவர் தமிழராக இருக்க வேண்டுமென்று ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இலங்கை பல்லின மக்கள் சமுதாய அமைப்பைக் கொண்ட நாடாக என்றுமே இருந்ததில்லை என்பதற்கு வரலாற்று ஆதாரமாக உள்ளது. தமிழர்கள் தங்கள் அரசியல் வாழ்வைத் தாங்களே நிர்ணயிக்க வேண்டுமென்ற உணர்வுடனேயே 20ஆம் நூற்றாண்டில் தமிழர் கால் வைத்தனர்.

ஆயினும் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 1931இல் வழங்கிய சனத்தொகை அடிப்படையிலான வாக்குரிமை இலங்கைத் தமிழ் மக்கள் தனியான தேச இனமென்ற நிலையை மாற்றி அவர்களை சிறுபான்மை இனமாக உலகிற்கு காட்டத் தொடங்கியது. இலங்கை சட்டசபைக்கு 1931இல் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலே யாழ்ப்பாணத்தில் மக்களால் பகிஸ்கரிக்கப்பட்டமை தமிழ் மக்கள் இந்த பெரும்பான்மை சிறுபான்மை சிந்தனையுடன் கூடிய அமைப்பினை ஒரு பொழுதும் ஏற்கவில்லை என்பதை அப்பொழுதே உலகிற்கு வெளிப்படுத்தியது. ஆனாலும் காலனித்துவ விலகலின் பொழுது பிரித்தானியா உருவாக்கிய சோல்பரி அரசியலமைப்பு இலங்கைத் தமிழர்கள் மேல் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தின் நவகாலனித்துவம் ஒன்று வளர்ச்சி பெற வைத்தது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம் என்ற மூன்று தமிழ்த் தலைவர்களின் காலத்தை உள்ளடக்கியதாக பிரித்தானிய காலனித்துவம் தோற்றுவித்த ஜனநாயக அரசுக்காலம் 1972 வரை காணப்பட்டுள்ளது. இந்த ஜனநாயகத் தன்மை என்பது பிரித்தானிய காலனித்துவத்தின் வலுக்கட்டாயமான இணைப்பினால் நவகாலனித்துவ ஆட்சியொன்றை தமிழீழ மக்கள் மேல் தோற்றுவித்த துயர வரலாறாக காலனித்துவ விலகலான 1948க்குப் பின் வந்த கால் நூற்றாண்டுகளிலும் மாறியது.

> 1977 தேர்தலில் இதற்கான குடியொப்பத்தையும் தமிழீழ மக்கள் அளித்து தாங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் தமிழீழ அரசியல் அமைப்பை இயற்றும் தமிழீழ அரசியலமைப்புச் சட்டவாக்க சபையாக மாறவேண்டுமென்ற மக்கள் ஆணையையும் பிறப்பித்தனர்

இதனை இந்த தமிழ்த் தலைவர்களின் அரசியல் வாழ்க்கை அனுபவங்களே உலகிற்கு நன்கு இனங்காட்டின. சேர். பொன்னம்பலம் இராமநாதன் பிரித்தானிய காலனித்துவத்தின் சட்டசபைக் காலத்து தலைமை. இவரது அரசியல் அனுபவங்கள் தமிழர்களுடன் இணைந்து வாழும் நிலையில் சிங்கள மக்கள் தமிழ்த்தலைமையை ஏற்க மாட்டார்கள் என்பதற்கு சரித்திர உதாரணங்களாகின.

ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்க்கை 50க்கு 50 என்ற கோஸத்துடன் இலங்கை முழுவதும் தமிழர்களுக்கு சமசந்தர்ப்பங்களை உருவாக்க முயன்று தோல்வி கண்ட அனுபவத்தை உலகிற்கு தெளிவாக்கியது. சமசந்தர்ப்பம் என்ற சொல்லுக்கே சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களின் அரசியல் அகராதியில் இடம் இல்லையென்பதை ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்க்கை உணர்த்தியது.

**-கரன்-**

தந்தை செல்வநாயகம் கூட்டாட்சி முறையில் இலங்கையில் தமிழரசில் வாழ்ந்த தமிழ்த் தேசிய இனமும் சிங்கள அரசில் வாழ்ந்த சிங்கள தேசிய இனமும் தங்கள் அரசியல் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளலாமென்ற நம்பிக்கையுடன் தன் அரசியல் வாழ்வை நடாத்தினார். அவர் அது ஒரு பொழுதுமே சிங்கள பௌத்த பேரினவாதிகளால் ஏற்றுக்கொள்ளப் படாது நவ்காலனித்துவ அடிமைத் தனத்தை தமிழ் மக்கள் மேல் தோற்றுவித்து விட்டமையை அனுபவபூர்வமாக உணர்ந்தார். இறுதியில் 1972ஆம் ஆண்டு சிங்கள பௌத்த சிறீலங்கா குடியரசு பிரகடனத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதை உலகிற்கு அறிவிக்க தன் காங்கேசன்துறை தொகுதிப்பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை துறந்து அடையாள மக்கள் கருத்துக் கணிப்புக்கு வழிசமைத்தார். இந்த மக்கள் கருத்துக் கணிப்புத் தேர்தலில் அவர் பெற்ற மகத்தான வெற்றியின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை 1975இல் சிறீலங்காப் பாரளுமன்றத்தில் வெளியிட்டு அன்று முதல் சிறீலங்காப் பாராளுமன்றத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் எந்த தொடர்பும் இனியில்லை என உலகிற்கு உறுதியாக எடுத்துரைத்தார். தமிழர்கள் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை தாங்களே எவ்விதம் முடிவு செய்யப்போகின்றனர் (சுயநிர்ணய உரிமையை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றனர்) என்பதை 1976 இல் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழீழத் தனியரசை மீள அமைப்பதற்கான தமிழீழ மக்களின் முடிந்த முடிவாக உலகிற்கு அறிவித்தார்.

1977 தேர்தலில் இதற்கான குடியொப்பத்தையும் தமிழீழ மக்கள் அளித்து தாங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் தமிழீழ அரசியல் அமைப்பை இயற்றும் தமிழீழ அரசியலமைப்புச் சட்டவாக்க சபையாக மாறவேண்டுமென்ற மக்கள் ஆணையையும் பிறப்பித்தனர். இதனை சிறிலங்கா தடுக்குமானால் அதனைப் போராடிப் பெறவேண்டுமென்ற கட்டளையும் தமிழீழ மக்களால் தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளுக்கு விதிக்கப்பட்டது.

அந்தக் கட்டளையால் தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை சிறீலங்காப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளாக தமிழீழ மக்கள் கருதவில்லை. தங்கள் தமிழீழ அரசின் அரசியலமைப்பு சபையினை தாங்கள் தேர்தல் மூலம் நியமித்ததாகவே கருதினர். இதனை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிறைவேற்றத் தவறி எந்தச் சிறீலங்காப் பாராளுமன்றத்தை மக்கள் நிராகரித்தனரோ அதில் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்கள் ஆணைக்கு எதிரான செயற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டனர். இதனால் எந்த சிறீலங்கா அரசாங்கத்துடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என அதனை அந்நிய அரசாகப் பிரகடனப்படுத்தினரோ அந்த அந்நிய அரசாங்கத்தின் உறுப்பினர்களாகப் பதவிகள் வகிக்கும் துரோகத்தனத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப்பிரதிநிதிகள் செய்து அந்த அரசாங்கத்திற்கு தமிழர்களதும் அரசாங்கமென்ற சட்ட அந்தஸ்தை ஏற்படுத்தி வந்தனர்.

இந்நிலையைப் பயன்படுத்தி சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ மக்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெறும் தன் திட்டத்தை வேகப்படுத்தியது. இது இனஅழிப்பினூடாக இனங்காணக் கூடிய அச்சத்தை தோற்றுவித்தல் என்ற அரசியல் செயல் முறையாக சிறீலங்காவால் திட்டமிட்டப்பட்டு செற்படுத்தப்பட்டு வந்தது. இந்த இனஅழிப்புகளினால் தங்கள் நாளாந்த வாழும் உரிமைகள் மறுக்கப்பட்டு உடல் உயிர் சேதங்கள் அதிகரித்து வந்தமையில் இருந்து தம்மைத் தாமே தற்பாதுகாத்துக் கொள்ளவும் - தங்கள் தமிழீழத் தனியரசை மீள அமைத்தலென்ற இறுதியானதும் உறுதியானதுமான மக்கள் தீர்ப்பை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பான அமைதி வாழ்வைத் தமக்குத் தாமே நிறுவிக்கொள்வதற்காகவும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பாக 1972 முதல் இன்றைய தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் வேகமாக வளர்ந்து வந்தனர்.

தமிழீழ மக்கள் தங்கள் பாதுகாப்பையும் தங்கள் தமிழீழ தேசத்தை மீளமைக்கும் தேவையையும் பூர்த்தி செய்வதற்கான ஆற்றல்களை தடுக்கும் முகமாக 1978 இல் பயங்கரவாத தடைச் சட்டம் என்ற இனஅழிப்புக்களை நியாயப் படுத்த கூடிய கொடிய சட்டத்தை சிறீலங்கா நிறைவேற்றிக் கொண்டது. ஆயினும் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தால் தமிழீழ இளைஞர்கள் மேலும் மேலும் வீறு கொண்டெழுந்து சிறீலங்காவின் அடக்கு முறைகளை எதிர்த்தனர். ஆயினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பின்னணியில் உருவாக்கப்பட்ட மனிதாயத்திற்கு எதிரான சட்டங்களின் துணையுடன் மிக மோசமான தமிழின அழிப்பு 1983 யூலையில் தமிழீழத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் மேல் நடாத்தப்பட்டன. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக கதைப்பது தேசத் துரோக குற்றமாக்கப்பட்டு தமிழர்களின் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதுவும் போதாது என்று 1983இல் அப்பாவித் தமிழ் மக்கள் மேல் முழுஅளவிலான யுத்தத்தை சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா பிரகடனப்படுத்தினார்.

இதனால் தமிழீழ மக்களின் அரசியல் தலைமையாகவும் இராணுவத் தலைமையாகவும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளை சென்றடைந்தது.

> இதனால் தமிழீழ மக்களின் அரசியல் தலைமையாகவும் இராணுவத் தலைமையாகவும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளை சென்றடைந்தது

இந்தப் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மீட்கப்பெற்ற பகுதிகளில் 1990களில் தமிழீழ மக்கள் தங்கள் அரசு நோக்கிய அரசை நிறுவிக் கொண்டனர். இந்த தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதற்கான சர்வதேச சூழ்நிலைகள் பிரகாசமடைந்து வந்த காலகட்டத்தில் அதனை திசை திருப்பி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இராணுவ அடக்கு முறைகளுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் நியாயங் கற்பித்து அதனை முன்னெடுப்பதற்கான முழு முயற்சிகளில் சந்திரிகா குமாரதுங்கா 1994இல் இறங்கினார். இதன் முதற் படியாக தமிழீழ மக்களையும் விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்தல் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச மட்டத்தில் இருந்து வரும் ஆதரவுகளை இல்லாதொழித்தல் என்ற இரண்டு தீய நோக்குகளுடன் சந்திரிகா பேச்சுவார்த்தை முன் முயற்சிகள் என்ற நாடகத்தை தொடங் கினார். அதனுடைய தீய நோக்குகளை உணர்ந்து மக்களுடைய சாதாரண வாழ்வுக்கு தடையாக

(தொடர்ச்சி 11–ம் பக்கம்)

# வழி


*-கலைச்செல்வி-*



பனி வெய்யில் சுள் என்று எரித்தது. பஸ்கந்தபுரத்தில் இரண்டு மூன்று நாட்களாக ஒரே வாகனச் சத்தங்கள். வவுனிக்குளம், ஒட்டங்குளம், பாண்டியன் குளம், போன்ற இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயருவதால் அவர்கள் தங்கள் உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று தங்கள் சாமான் சட்டுக்களையும் கொண்டு வருவதால் வாகன நெரிசலும் அதனால் ஏற்பட்ட புழுதி வெட்கையும் தலையிடியைக் கொடுத்தது.

வெளித்திண்ணையில் உட்கார்ந்து வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள் சாருமதி. அவள் கணவர் மாணிக்கவாசகத்தின் தங்கையின் குடும்பமும் பாண்டியன்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்து இவர்கள் வீட்டுக்கு வருவதாகத் தகவல் கொடுத்திருந்தார்கள். வயலில் அரிவு வெட்டுக்காலம் ஆகையால் மாணிக்க வாசகரால் தன் தங்கை குடும்பத்தைப் போய் கூட்டிவர முடியாமல் போய்விட்டது. எப்படியும் ஒரு லான்ட்மாஸ்டர் பிடித்துக் கொண்டு இரவு வந்துவிடுவார்கள் என எதிர்பார்த்தனர். விடிந்து காலை பத்து மணியை அண்மித்தும் அவர்கள் வராதது சாருமதிக்கு லேசான மனக்கலக்கத்தைக் கொடுத்தது எதற்கும் சமையலுக்கு ஆயித்தம் செய்வோம் என்று நினைத்தவளாக வீட்டுக்குள் திரும்பினாள்.

கேற்றடியில் திடீரென ஒரு வாகனம் வேகமாக புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்றது. சாருமதி அவசரமாக வாசலில் ஓடிவந்து நின்று பார்த்தாள். அந்த வாகனத்தில் இருந்து இரண்டு மூன்று இளைஞர்கள் குதித்தார்கள். அதில் ஒருவன் மாத்திரம் சாருமதி வீட்டுக் கேற்திறந்து உள்ளே வந்து கொண்டிருந் தான். மறுகணமே வாகனம் வேகமாக மறைந்து போனது. வாகனத்தின் இரைச் சலிலும் அதன் வேகத்திலும் அதில் வந்தவர்களை புரிந்து கொள்ள முடிந் தாலும், கேற்திறந்து அவள் வீட்டை நோக்கி நடந்துவருபவன் யார்? சாரும



திக்கு உடம்பெல்லாம் ஒரு கணம் சிலிர்த்தது.

“வசீ ... வசீ ... நீயா..” என்ர ராசா... வந்திட்டியே! அவனை ஓடிப்போய்க் கட்டிக் கொண்டாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை மூச்சு இரைத்தது. “என்ரபிள்ளை என்னைத்தேடி வந்திட்டான்! வசீ... உனக்கு என்ன குறை வச்சனான் எண்டு என்னை விட்டுட்டுப் போனனீ...?” அவன் மார்பில் தன் தலையை மெல்ல மோதி அழுதாள் சாருமதி. அதற்கிடையில் இடம்பெயர்ந்து வந்து அவர்கள் காணிக்குள் கொட்டில்கள் போட்டுத் தங்கியிருக்கின்ற தெரிந்தவர்கள் எல்லோரும் கூடிவிட்டனர்.

வசீகரன் அம்மாவின் அணைப்பை விடுவித்துக் கொண்டு வீட்டுக்குள் போய் முன் திண்ணையில் இருந்த கதிரையில் உட்கார்ந்து கொண்டான். சாருமதிக்கு வசீகரனைக் கண்ட சந்தோஷத்தில் இருதயம் பலமாக அடித்துக் கொண்டிருந் தது தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள். நான்கு வருடத்துக்கு முதல் ஓலெவல் சோதினைக்காக அவன் படித்துக் கொண் டிருந்த சமயம் ஒரு நாள் ரியூசனுக்கு என்று புறப்பட்டவன் வீடு திரும்பி வரவில்லை. எல்லாத் தாய்மாரையும் போல சாருமதியும் துடித்தாள். அவன் பிரிவால் துவண்டாள் விரதமிருந்தாள் அவன் வரவே இல்லை.

வசீகரனும் போனபின் ஒரே பெண்பிள்ளை என்று வீட்டோடு வைத் திருந்த வெண்ணிலாவையும் கனடாவில் இருக்கும் .அண்ணன்மாருடன் அனுப்பி வைத்தனர். சாருமதி செல்லமாகக் கொள்ளிப்பிள்ளையென வளர்த்த வசீ பிரிந்திருந்ததாலும் நாட்டுக்குள் ஏதோ ஒரு மூலையில் எத்தனையோ அவலங் களுக்கு மத்தியில் அவன் வாழ்ந்து கொண்டிருக்கையில் அவனை மாத்திரம் அனாதரவாய் விட்டுவிட்டு மிகுதி மூன்று பிள்ளைகளுடனும் வெளிநாட்டில் போய் வாழ்வதற்கு சாருமதிக்கோ, மாணிக்க வாசகத்திற்கோ விருப்பம் வரவில்லை.

என்ன மாதிரி ஒல்லியாய் இருந்தவன். கொடுக்கும் சாப்பாட்டுக்கெல்லாம் நொட்டை சொல்லிச்சொல்லி உடம்பிலே சதையுமின்றி இருந்தவன். எவ்வளவு உயரமாய், கம்பீரமாய், வாட்டசாட்டமான இளைஞனாய் நிமிர்ந்து நிற்கிறான். மீசை கூட அழகாய் இருக்கிறது. நான்கு வருடத்துக்கு முதல் சாருமதியைப் பிரிந்து போன வசீகரனா இவன்? வசீகரனை இனம் காணவே அவனைப் பெற்ற தாய்க்கு எவ்வளவு நேரம் எடுத்தது.

இத்தனை நேரத்துக்குள்ளும் வசீகரன் யாருடனும் பெரிதாகப் பேசிக்கொள்ள வில்லை. ஓசை சிந்தாத சிரிப்பை மாத்திரம் உதிர்த்தான். மாணிக்கவாச கமும் வயலில் இருந்து வந்திருந்தார் மகனை ஏற இறங்கப் பார்த்தார். வசீகரன் சிரித்துக் கொண்டே அப்பாவை மாத்திரம் “என்னப்பா” என்று கேட்டான் “ம்” என்றார் மாணிக்கவாசகம். பெருமிதமும் கலந்து இருந்தது.

“சாருமதி ... ! இரண்டு மூண்டு நாள் நிண்டு போட்டு திரும்பவும் போக வேணுமாம் போறத்துக்கிடையில் நல்ல சாப்பாடுகள் செய்து குடு. இண்டைக்கு ஒரு சேவலைப் பிடிச்சுக் காச்சிக் குடும். அவனுக்கெண்டு நீ வேண்டிப்பெட்டியில் வைச்சிருக்கிற உடுப்புகளை எடுத்துப் போடக்குடு...” மகனோடு ஆறுதலாக கதைத்துவிட்டு வந்து கூறினார் மாணிக்க வாசகர். இவ்வளவு நாட்களும் இருந்த வேதனையைவிட வசீகரனை பார்த்த பின் ஒரு மடங்கு வேதனை கூடிவிட்டது போல் உணர்த்தாள் சாருமதி.

“அம்மா...! சமையுங்கோ பசிக்குது.. நான் குளிச்சுப்போட்டு வாறன்” சொல்லிக் கொண்டே கிணற்றடிக்குச் சென்றான் வசீ. முன்பு தொட்டிக்குள் தண்ணீரை நிரப்பி விட்டு அதற்குள் மணிக்கணக்காக கிடப் பான் வசீ. அம்மா தொண்டை கிழியக் கதறினாலும் தான் நினைத்த நேரம் தான் வெளியே வருவான். அந்த தொட்டி இப்போது காய்ந்து வெறுமனே கிடந்தது. அக்கா வெண்ணிலா இருந்த காலங்களில் கிணற்றடி நல்ல துப்பரவாக இருக்கும். சுற்றி அடைத்திருந்த வேலிகூட கறையான் பிடித்து உக்கிப்போய் இருந்தது.

“தம்பி குளிக்கிறதிற்கு தண்ணி கிள்ளித்தரட்டே” அம்மா ஒடி வந்து கோட்டாள்.

“என்னம்மா நான் சின்னப் பிள்ளையே”! சிரித்துக் கொண்டே அவன் குளிக்க ஆரம்பித்தான். கூடவே லான்ட் மாஸ்டர் இரையும் சத்தம் கேட்கவே சாருமதி வீட்டை நோக்கி நடந்தாள்.

லான்ட்மாஸ்டரை உள்ளே விடுவதற் காக மாணிக்கவாசகர் ஓடிப்போய்க் கேற்றைக் திறந்தார். “அந்த முற்றத்தில் நிக்கிற வேப்பமரத்துக்கு கீழே விடுங்கோ” என்று கைகாட்டினார்.

சாமான் சட்டுக்களோடு உட்கார்ந்து இருந்ததில் கால்கள் விறைத்துப் போய் விட்டன. மாணிக்கவாசகரின் தங்கை சகுந்தலாவுக்கு ஏற்கனவே பிறசர் உட்பட பல வருத்தங்களும் சேர்ந்து சரீரமும் பெருத்து ஒரு நோயாளி ஆகிவிட்டிருந் தாள் அவள். மாணிக்கவாசகமும் சகுந்தலாவின் கணவர் பேரின்பமும் சேர்ந்து சகுந்தலாவின் இரு கரங்களையும் பிடித்து அவளை மெதுவாக கீழே இறக்கிவிட்டனர். அண்ணனைக் கண்ட வுடன் சகுந்தலாவுக்கு கண்களில் நீர் பளபளத்தது.

அந்த வேப்பமரத்தின் நிழலில் தொப்பென உட்கார்ந் தாள் சகுந்தலா. திவ்வியா சட்டென இறங்கி தந்தையோடு சேர்ந்துசாமான்களை இறக்கி வைத்தாள்.

“நீ இரு பிள்ளை அவை இறக்கட்டும்’! என்றாள் சகுந்தலா அதைப் பொருட்படுத்தாது பிரப்பங்கூடையில் அடைத்துக், கொண்டுவந்த பத்து பதினைந்து கோழிகளை மரநிழலில் இறக்கிவிட்டு அத்தை சாருமதியிடம் ஒருசட்டி வேண்டி அதில் தண்ணீர் ஊற்றிவிட்டாள். யாழ்ப்பாணத்தில் எவ்வளவு வசதியாய் வாழ்ந்தவர்கள். தொண்ணூற்று ஐந்தில் இடம்பெயர்வோடு கிளாலி நோக்கி எடுத்த பயணம் இந்த வன்னி முழுவதும் அகதிகளாக அலைய வைத்துக் கொண்டி ருக்கிறது. ஏதோ இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் இருப்பதால் சாப்பாட்டுச் செலவுக்கும் மருந்துச் செலவுக்குமாய் சமாளித்துக் கொள்கிறார்கள். திவ்வியாவை நினைத்துத்தான் சகுந்தலாவுக்கு கவலை. திவ்வியாவுக்கு மூத்தவள் அனுசியா வெளிநாட்டில் கணவன் பிள்ளைகளோடு சுகமாக வாழ்கிறாள். திவ்வியா கடைசிப் பிள்ளை. கடைசிவரைக்கும் அவள் தன்னோடு இருந்து படித்து பட்டம் பெற்று வாழவேண்டும் என ஆசைப்பட்டாள் ஆனால் நாட்டு நிலையால் திவ்வியாவின் படிப்பும் அல்லோல கல்லோலப்பட்டு விட்டது. திவ்வியாவிடம் முந்திய சந்தோஷங் கள் இல்லை. நாம் உண்டு நம் வீடு வாசல் உண்டு என இருக்க முடிய வில்லை. நாய் குட்டிகளைக் காவியது போல ஒவ்வொரு இடமாய் சாமான் சட்டுக்களோடு அலைவம் “இதைவிட நூறு தடவை சாகிறது மேல்” என்று அடிக்கடி கூறுவாள்.

சகுந்தலாவின் சிந்தனையை சாருமதி கலைத்தாள். வசீகரன் வந்த செய்தியைக் கூறி ஒரு கிழமையில் அவன் திரும்பவும் போய்விடுவதாகவும் சொல்லிக் கவலைப் பட்டாள்.

வசீகரனுக்கு திவ்வியாவை நன்றாக ஞாபகம் இல்லை. அவள் யாழ்ப்பாணத் தில் பிறந்து வளர்ந்தவள். இவன் வன்னியில் பிறந்து வளர்ந்தவன். ஓரிரு தடவை மாமி வீட்டுக்கு போயிருக்கிறான். பூநகரிப் பாதையால் கடைசியாக நல்லூர்த் திரு விழாவுக்கென போன ஞாபகம். அப்போது அவள் சிறுமி அதன் பின் அவள் பெரிய வளாகி இடம் பெயர்ந்து வன்னிக்கு வரும்போது வசீ வீட்டில் இல்லை.

இரண்டு நாட்களில் வசீகரன் திவ்வியா வோடு நன்றாக கதைக்க பழகிவிட்டான். அவனுடைய பண்பான குணம் உயர் வான கொள்கை இந்த இளம் வயதில் அவன் அறிவுக்கு மேலான அவன் பேச் சுக்கள் எல்லாமே திவ்வியாவுக்கு பிடித் திருந்தது.

கிணற்றுக் கட்டில் உட்கார்ந்தபடி வசீ ஏதோ கூறிக்கொண்டிருக்கிறான். உடுப்புத் தோய்க்கும் கல்லில் உட்கார்ந்து காலால் மண்ணில் கீறிக் கொண்டிருக்கிறாள் திவ்வியா. இதை சாருமதியும் சகுந்தலா வும் பார்த்து விட்டனர்.

“மச்சாள் வந்து இரண்டு மூன்று நாளாகயில்ல வசீயும் திவ்வியாவும் கதைக்கிறதைப் பார்த்தால்...” என்று சாருமதி!

“எனக்கெண்டால் ஒண்டிலும் நம்பிக்கை இல்ல மச்சாள்! இந்தக் காலத்து இளம் பிள்ளைகள் மனதில ஆசைகளை விட கொள்கை கூடுதலாக இருக்கு. அந்தக் காலத்தில ஒரு இளம் பொம்புளைப் புள்ளையும் ஆம்புளைப் புள்ளையும் கதைச்சால் காதல் கீதல் எண்டு சொல்லு வினம் ஆனா இப்ப நடு றோட்டில் நிண்டு நாட்டைப்பற்றி கதைக்கிதுகள்... அதைப் பார்க்க எங்களுக்குப் புல்லரிக் குது மச்சாள் ..”! என்றாள் சகுந்தலா.

சாருமதிக்கு இரண்டும் கெட்ட சூழ்நிலை நான்கு வருடங் களின் பின் மகனைக் கண்டதில் சந்தோஷம் பின்பு பிரியப் போகிறோம் என்ற துன்பம். இனி அவனை எப்போது எந்நிலையில் சந்திப் பது? சந்திக்கவே முடியா மல் போனால்...? அவளால் நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை.

திவ்வியாவும் வசியும் கதைப்பதைப் பார்த்தால் சிலவேளை அவன் மனதில்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

## நூற்றாண்டுக்

உள்ள இராணுவ முகாங்களை அகற்றும்படி விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை மோதல் தவிர்ப்பையும் பேச்சுவார்த்தைகளையும் முறிவடையச் செய்து யாழ் குடாநாடு மீதான தனது யுத்தத்தை தொடங்குவதற்கான செயல் முறையாக சந்திரிகா மாற்றினார். இந்த சமாதானத்திற்கான யுத்தம் என்ற போலிக் கோஸத்துடனான யுத்தம் இறுதியில் அப்பாவித் தமிழ் மக்கள் 5 இலட்சம் பேர் தங்கள் பாரம்பரிய வீடு வாசல்களை இழந்து பாதுகாப்புத் தேடி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயர வைத்தது. அப்பாவிப் பொதுமக்களை இடம் பெயர வைத்த கொடுமைக்காரி சந்திரிகாவும் அவரின் மாமனார் ரத்வத்தையும் விடுதலைப் புலிகளை காட்டுக்கு அனுப்பி விட்டதாக கொக்கரித்தனர். தமிழர்களின் இதயபூமியான யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து சிங்கக்கொடியேற்றி மகிழ்ந்து கொழும்பில் வெற்றிவிழாக் கொண்டாடி இனவெறி வளர்த்தனர். உலக நாகரீகமே வெட்கி தலை குனியக்கூடியவகையில் தங்கள் தாயக விடுதலைக்காகப் போராடி தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களின் துயிலகங்களை சிறீலங்கா இராணுவ இனவெறியர்கள் புல்டோசர்கள் கொண்டு இடித்துத் தகர்த்தனர். எழுபதினாயிரத்துக்கு மேற்பட்டஎறிகணை வீச்சுக்களையும் குண்டெறிகளையும் தாங்கி தன் உருக்குலைந்த நகரமாக யாழ்ப்பாணத் திருநகர் காட்சியளித்தது. தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிப் புறப்பட்ட அப்பாவி மக்களில் பலரை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக திருப்பி இழுத்து வந்து யாழ்குடா நாட்டில் குடியமர்த்தி திறந்த சிறைச்சாலையாக யாழ்குடா நாட்டை மாற்றினர். பள்ளிக்கு சென்ற கிரிசாந்தி உட்பட பல நூறு தமிழ்ப் பெண்கள் மேல் பாலியல் வன்முறைகளும் இனக்கொலைகளும் நடாத்தப்பட்டன. அறுநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் காணாமல்போய் இறுதியில் அவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் உயிருடனும் கொன்றும் புதைக்கப்பட்ட சோக வரலாறு வெளியாகியது. இதே கதை தமிழீழமெங்கும் தென் தமிழீழம் உட்பட வரலாறாகியது. தமிழ் மக்களை வாட்டி வதைத்த சந்திரிகா தன் படைகளுக்கு வழங்கல்களை சீர்ப்படுத்த பாதை திறப்பு என்ற பெயரில் வன்னியை மற்றைய தமிழ் மாவட்டங்களிலிருந்து தனிமைப்படுத்தும் வெற்றி நிச்சயம் படையெடுப்பை ஆரம்பித்தார்.

ஆனால் தமிழ் மக்கள் வதைக்கப்பட்டு வருவதைக் கண்ட விடுதலைப் புலிகள் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து சிறீலங் காப்படைகளை விரட்டும் நோக்கில் ஓயாத அலைகள் தொடர் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். முதலாவது அலை முல்லைத்தீவு மாவட்டத்தை விடுவித்தது. இரண்டாவது அலை கிளிநொச்சி மாவட்டத்தை விடுவித்து வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தது. ஐம்பது நாட்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலை 3 வன்னிப் பெருநிலப் பரப்பையும் மணலாறு மன்னார் மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகளையும் விடுவித்துள்ளது. தெடரும் ஓயாத அலை 3 பரந்தனை மீட்டு ஆனையிறவை மீட்பதற்கான முயற்சிகளிலும் குடா நாட்டை விடுவிப்பதற்கான தாக்குதல்களிலும் பெருவெற்றி பெற்று வருகிறது.

இந்த ஓயாத அலைகள் 3 தமிழீழத் தாயகம் புத்தாயிரமாம் ஆண்டில் மீட்கப்பட்டு விடும் என்பதற்கான நம்பிக்கையைத் தமிழீழ மக்களிடை உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. ஒரு நூற்றாண்டாக தமிழீழ மக்களின் கனவாக இருந்து வரும் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமென்ற நூற்றாண்டுக் கனவு நனவாகும் காலமாக புத்தாயிரம் ஆண்டு மலரப் போகின்றது. நூற்றாண்டுக் கனவை நனவாக்கும் சக்தியுள்ள தலைமையாக எங்கள் தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் மதிநுட்பமான திட்டமிடல்களும் உறுதியான வழிகாட்டல்களும் திகழ்கின்றன. இந்த நூற்றாண்டுக் கனவை நனவாக்கும் பணியில் ஏதாவது ஒரு வகையில் இயன்ற அளவில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு புலம்பெயர் தமிழனுக்கும் உண்டு. புத்தாயிரம் ஆண்டில் எம்பணி செய்ய திடமான நெஞ்சுடன் எழுவோம். வாருங்கள்.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

## வழி

ஏதாவது ஆசை... திவ்வியாவையும் வசீகரனையும் மணவறையில் நிறுத்திப் பார்த்து ஒருகணம் மகிழ்ந்து போனாள் சாருமதி.

அடுத்த நாள் காலை வசீகரன் போக வேண்டும். அவனைக் கொண்டு வந்து இறக்கிய அதே வாகனம் கேற்றடியில் வந்து நின்றது. வசீகரன் சந்தோஷமாக எல்லோரிடமும் விடைபெற்றான். சாருமதியும் சகுந்தலாவும் கன்கலங்கினர். திவ்வியா அமைதியாக நின்றாள். அடுத்த நாள் காலையில் அவளும் இவ்வீட்டில் இருக்கமாட்டாள் என்பது இப்போது அவனுக்கு மாத்திரம் தான் தெரியும்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## வியட்நாமிய

உற்பத்திப்போரை பொறுத்தவரை மக்கள் இப்போது தமது இறுதியான சுய உழைப்பில் பெருமளவு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை ஆயுதப் போருக்கும் தம்மை ஓரளவு தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஹோசிமின் தலைமையில் வியட்நாமிய மக்கள் சேனை எவ்வாறு போராடியதோ அவ்வாறு தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழர்சேனையும் தம்மை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த தமிழர் சேனை பெருகும் போதும் தமது பணிகளைச் செய்ய ஆரம்பிக்கும் போதும் ஆக்கிரமிப்பாளர்கள் முற்று முழுதாக விரட்டப்பட்டு எமது தாயகம் விரைவில் மீட்கப்பட்டுவிடும் என்பது தெளிவு. எனவே அந்த பெருமையினையும் வரலாற்றையும் ஏற்படுத்த மக்கள் படைகள் விரைவில் தயாராக வேண்டும்.

## சர்வதேச மனிதர் உரிமைகள் தினமும் தமிழர் மனிதர் உரிமைகள் மையமும்

கடந்த மார்கழி 10ம் திகதி, 51வது சர்வதேச மனிதர் உரிமைகள் தினம் உலகம் பூரகவும் கொண்டாடப்பட்டது. தமிழர் மனிதர் உரிமைகள் மையமும் (**TCHR**) பிரான்ஸில் பாரிசிலும், பிரித்தானியாவில் மஞ்செஸ்ரர் நகரிலும் மனிதர் உரிமைகள் தினத்தை கொண்டாடிய அதேவேளை, **TCHR**ன் பத்தாவது ஆண்டையும் மிகவும் சிறப்பாக கொண்டாடியது.

சர்வதேச மனிதர் உரிமைகள் தினத்தை கொண்டாடு முகமாக த.ம.உ. மையத்தினால் தமிழர் மீதான மனிதர் உரிமை மீறல்களான படுகொலை, சித்திர வதை, சொத்துக்கள் அழிப்பு, பொருளாதாரத்தடை போன்ற படங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்று பாரிசிஸில் இடம்பெற்றது. பிரான்சின் பிரபால சட்டத்தரணிகள் , கல்விமான்கள் , சமூகசேவையாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவில் மஞ்செஸ்ரர் நகரில் நடைபெற்ற த.ம.உ.மை. வைபவத்தில் மஞ்செஸ்ரர் நகரின் நகரபிதா சிறப்புரையாற்றினார். இக்கொண்டாட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

தமிழீழ அன்புச் சகோதரர்களே !

*தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் தற்போதைய கதாநாயகி சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் சிறீலங்காவின் ஜனாதிபதியாக தேர்தல் மூலம் சிங்களவர்களால் தெரிவாகியுள்ளார். எனவே தொடர்ந்தும் நம் தாயகம் போரை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.*

*சந்திரிகா தமிழின அழிப்புப் போரை வழமைபோல் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என நியாயப்படுத்த போகின்றார் என்பதை அவரின் தேர்தலின் பின்னான பேச்சுக்கள் தெளிவாக்குகின்றது. எந்த வகையிலும் அவர் அப்பாவித் தமிழ் மக்களை கொல்வதைத் தடுப்பதற்கு ஒரேவழி சிங்களவரின் பேரினவாத இராணுவத்தை எமது மண்ணிலிருந்து விரட்டியடிப்பதே. இதற்கான சகல தேவைகளையும் நாம் ஈழத் தமிழினத்தை பாதுகாத்து நிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ கட்டமைப்பிற்கு வழங்குவது அவசியமாகின்றது.*

*போதிய இராணுவ உபகரணங்களும் வெடிபொருட்களும் அவர்கள் வசம் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதை ஓயாத அலைகள் 3 இன் மூலம் அவர்கள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.*

*இன்று எமது தாயகத்தை பாதுகாத்து நிற்கும் விடுதலைப் புலிகளின் இராணுவ கட்டமைப்பு பல பத்தாயிரம் போராளிகளைக் கொண்ட ஓர் உறுதியான அமைப்பு. இதற்கு துணையாக துணைப்படை, எல்லைக் காவல்படை என்று இன்னும் பல பத்தாயிரம் ஆள்அணிகளைக் கொண்ட அமைப்பும் உண்டு. இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆள் அணிகளைக் கொண்ட சிங்கள பௌத்த பேரினவாத இராணுவயந்திரத்திடம் இருந்து எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க எமது இராணுவக் கட்டமைப்பு நவீன மயப்படுத்த வேண்டிய தேவை தற்போது அவசியமாகின்றது.*

*எமது இந்த இராணுவக் கட்டமைப்பின் சராசரி வருடாந்த தேவை பலநூறு கோடி ரூபாய்களாக வளர்ந்து கொண்டு செல்லும் இவ்வேளையில், நாம் இன்னும் பல நவீன உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இதை பூர்த்தி செய்ய சிங்கள பௌத்த பேரினவாதத்தால் அநியாயத்திற்கும், அடக்கு முறைக்கும் உள்ளாக்கப்பட்டு அதனால் உயிரைப் பாதுகாக்க புலம்பெயர்ந்து அகதிகளாக வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் தார்மீகக் கடமையாகின்றது.*

*சந்திரிகா தொடர்ந்தும் தொடுக்கப்போகும் இனவாதப் போரில் இருந்து எம்மை பாதுகாக்க இதுதான் ஒரே ஒரு வழி. இதைவிட வேறுவழி இல்லை. இதை காலம் தாழ்த்தாது செய்தல் வேண்டும்.*

*இனி சந்திரிகாவின் பொய்யான சர்வதேச பரப்புரைகளை முறியடிக்க நாமனைவரும் ஒன்றுபட்டு நமது தேசத்தின், மக்களின் உண்மை நிலையை உலகின் முன் தெளிவாக்க வேண்டும். தாயகத்தில் வெற்றிகள்கிட்டும் பொழுது மகிழ்வுதுடன் மட்டும் நம் கடமை முடிந்து விடவில்லை. அந்த வெற்றி ஏன் எய்தப்பட்டது எப்படி எய்தப்பட்டது அதனால் எம் மக்கள் அடைந்துள்ள பெரும் பயன்கள் என்ன அந்த வெற்றிகளுக்காக எம் மக்களும் புலிகளும் எவ்வளவுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளனர் போன்ற விடயங்களை நாம்தான் நமது மக்களின் ஊடகங்களாக வெளிக்கொண்டு வரவேண்டும். அவ்வாறே எமது மக்களின் துன்பங்களை, சிறீலங்கா அவர்களுக்கு இழைத்துவரும் சொல்லொணாக் கொடுமைகளை வெளிப்படுத்தி உண்மை நிலையை வெளிக்கொண்டுவர வேண்டிது எமது கடமை. எம் சுயநிர்ணய உண்மைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை அங்கீகரிக்க வேண்டியும் அடிப்படை மனிதாய தேவைகளில்லாமல் தவிக்கும் எம் மக்களுக்கு மற்றைய நாடுகளுக்கு செய்தது போல் சிறீலங்காவின் இறைமையை மீறி மனிதாய உதவிகளை வழங்கும்படி ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.*

*எமது மக்களின் முக்கிய பிரச்சனைகளில் முதலாவது நிரந்தர பாதுகாப்பு. மக்களின் இந்த பிரச்சினைக்கு காரணமாக இருக்கும் சிறீலங்காவின் படைகளை விலத்தாதவரை எமது மக்களின் எந்தப் பிரச்சினையும் தீரப் போவதில்லை. இந்தப் படைகளை சிறீலங்காவின் எந்த சிங்கள அரசாங்கமும் விலக்கிக் கொள்ளமாட்டா. இந்நிலையில் எமது மக்களின் ஒரே பாதுகாப்பு அரணான விடுதலைப் புலிகளின் பலத்திலேயே எமது மக்களின் வாழ்வின் எதிர்காலமுள்ளது. இந்த உண்மை எம்மால் வெளியுலகிற்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்படல் வேண்டும்.*

*சிங்களத் தலைவர்களையோ அல்லது மக்களையோ நாம் நம்பத் தயாராக இல்லை. எனவே விடுதலைப் புலிகளுடன் மூன்றாவது தரப்பு மத்தியத்துவத்துடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு போகும்படி சிறீலங்காவை வற்புறுத்தும்படியும், அப்படி அது போக மறுத்தால் விடுதலைப் புலிகளை அங்கீகரித்து தமிழீழத் தேசத்தின் எதிர்காலத்தை அவர்களுடன் நேரடியாகப் பேசி தீர்மானிக்கும் படியும் உலக நாடுகளை வற்புறுத்த வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.*

*இவற்றை எவ்வளவு வேகமாக நாம் செயல்படுத்துகிறோமோ, அவ்வளவு விரைவில் நம் தாயகம் விடுதலை பெற்று நம் மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெறுவர்.*

**வணக்கம்**

**அன்பின் ஆசிரியர்**

**(30.12.1999)**

# அலைகளும் புலிகளும் ஓய்வதில்லை

துந்துபி முழங்கிட
வந்தது சேதி!
என் தமிழீழம்
எழுந்தது மீள.
தேசங்களெங்கணும் சிதறுண்ட தமிழர்
கடல்களைத் தாண்டிக் கைகுலுக்கினர்.
பரவசம் தனைப் பகிர்ந்து களித்தனர்.
ஆனந்தத்தில் கண்
அருவியாய்ப் பொழிந்தது.
ஆயிரமாயிரம் பூக்களின் வாசனை......
கோடிக்குயில்களின் கூட்டுப்பண்ணிசை....
நிலவிலும் தண்மையாய்
நெஞ்சுக்குள் ஒரு சுகம்....
எதனுடன் ஒப்பிட
இத்தகு உணர்வதை?
பெருமிதம் என்பதா?
உலகத்து இன்பங்கள்
ஒருமித்து இதயத்துள்
புரளுது என்பதா?
சிங்களம் மட்டுமா தோற்றது....
என் தமிழ் வார்த்தைகள் கூட
புலிகளின் போர்த்திறம்
பாடிடும் போதினிற் தோற்றன.

நேற்று வந்தெம் நிலங்களைப் பிடித்தவர்,
பாதை திறப்பதாய் உபாதை கொடுத்தவர்,
கண்ணழிந்துமே கயமைகள் செய்தவர்,
வன்னி மண்ணதன் வாழ்வினைத் திருகி
துப்பாக்கி முனை மீதில்
சொருகிக் களித்தவர்,
புண்ணிய பூமியை விட்டகன்றனர்.
வாய்பிளந்து பார்க்குது சிங்களம்!
வாயடைத்துப் போயினார் ரத்வத்தை!
''என்ன பொய்யினிச் சொல்வது?
செத்துச் சிவலோகம் சென்றவர் எவருமே
சிங்களப்படையல்ல,
எங்கிருந்து முளைத்தனர் இவரென
அதிசயிப்பரோ?
கடைசிக் கௌரவம் கொடுப்பதால்
எண்ணிக்கை
கணக்குத் தெரியுமென்றஞ்சி மறுப்பரோ?
ஐயகோ!
என்ன பொய் சொல்வது?''
என்று..
உள்ளங்கைக்குள்ளே ஒரு யானை
வைப்பதற்கு
கள்ள விழி விழித்தார்
பாவம்! வழியொன்றும் தோணவில்லை.
பொய்யாலே போர்த்து மூடி விடும்
போர்க்களமா எங்களது?

முக்கி முனகி...
முந்நூறு தவணை சொல்லி...
புலிகளிடம்
சிக்கிப்பரிதவித்து சிதறுண்டு....
கதிர்காமு ஐயா உலகமெல்லாம்
கத்திப் பொய்யுரைத்து
கறந்த காசழித்து....
எத்தனையோ பலிகொடுத்து....
ஐந்நூற்றுச் சொச்ச நாளில்
ஆமையென நகர்ந்து...
ஆறாய்ப் புறப்பட்டு
நாற்றமெடுக்கும் குட்டைகளாய்த் தேங்கி
ஆங்காங்கே குந்தி இருப்பமென்றால்
விட்டனரா வெம்புலிகள்?
உனக்கு ஐநூறு நாட்கணக்கு.
அவர்களுக்கு
ஐந்து நாள் போதும்.
உம்மவரில் செத்தவனின் எண்ணிக்கையை
பத்தால் வகுத்து
பாருக்குச் சொல்லும் நீ,
இதையும் வகுத்துப் பார்!
வீரத்தை விவேகத்தை
விளங்கவொண்ணா வேகத்தை
ஐநாறு பிறப்பெடுத்தும் அடைவாயோ
நாமறியோம்.
சந்திரிகாவின் முந்தானைச் சேலையால்
மூடி அணைத்துவிட
புலிகளென்ன
சிக்கிமுக்கிக் கல்லில்
பிறந்த சிறுபொறியா?
பிரபாகரன் என்ற
தர்ம நெருப்பினின்றும்
தாவியெழுந்து வந்த தங்கங்கள்!
என்ன தவமிருந்தும் கிடைக்காத
பூமியின் புத்திரர்கள்!
சிங்களத்துச் சிறுநரிகாள்!
என்ன துணிவுமக்கு?
உம் பாட்டன் நட்ட மரம்
எங்களது எல்லைக்குள்
எங்கேனும் நிற்கிறதா?
முன்னையொரு காலம்
உம் அன்னைக்கும் அன்னை
காணி உறுதியொன்றைக் கையளித்து
''உமது நிலம்'' என்றுரைத்துப் போனாளோ?
பாண் போட வந்துவிட்டு
எங்களையே போறணைக்குள்
இடுவதென்றால் விடுவோமா?

இன்று பார்!
தர்மம் ஏவுகணையாகி
தலைதெறிக்க உனைத்துரத்த,
காடுமிர்த்து – ரவை
கனல்மழையாய்ப் பொழிய,
வியர்த்து விறுவிறுத்து
பயத்தில் கண்ணிரண்டும் பரபரக்க
உயிருறைந்து நடுநடுங்க ஓடுகிறாய்.
பேயுலவும் கானகத்தில்
நாயும் நரியும்
நன்றாக விருந்துண்ண
நீ விழுந்து கிடக்கின்றாய்.
இந்த நிலை ஏனுனக்கு?
சிங்களத்துச் சிப்பாயே!
கண்டிப்பிரபுத்துவக் கௌரவம் பலியெடுத்த
ஏழைக்கிராமத்தான் உனக்காக
இன்னுமும் நாம் இரங்குகிறோம்.

இத்தனை மரணங்கள் என்று
எண்ணிக்கை பார்த்து நாங்கள்
இறும்பூது எய்தவில்லை.
சாவுகளை எண்ணவில்லை,
சத்தியத்தின் வெற்றிகளை எண்ணுகிறோம்.
வறுமைச் சுமை இறக்க
துப்பாக்கி சுமந்தவனே!
உன்னை என் அன்னை மண்
என்ன செய்ததென்று இழிவு செய்தாய்?
சிறுபான்மை என்று சிறுமைப்படுத்தி...
சிறைப்படுத்தி...
எங்கள் மண்ணை
கறைப்படுத்தி இன்றுலகம்
கைதட்டி நகைக்க
இன்னும் பொய்யுரைக்க
வார்த்தைகளைத் தேடும் வஞ்சகரை
இனவெறியை....
நிலம் விழுங்க வந்த நீசர்களை
பச்சை மண்ணைக்கூட
பதைபதைக்க பட்டினியில் சாகவிட்ட
பதர்களை
அந்தப் பாதகரை
உதை விழுங்க வைத்தனர்
எங்கள் உயிரான கண்மணிகள்.
அதைக்கண்டும்
உவகையில்
கண்ணீர் உகுக்காத கண்ணிரண்டும்
புண்தானே?
தட்டாத கையிரண்டும்
தோளுக்குச் சுமைதானே?
பெருமை கொள்ளா இதயங்கள்
இயங்கி என்ன....
இக்கணமே நின்றுவிட்டால் தானென்ன?

கைதட்டல் போதாது,
கைகொடுக்க வேண்டும் நாம்.
இதயங்களுடன் கூட
இரும்புப்பெட்டிகளும்
உதய நாளுக்காய் இளகவேண்டும்.
முன்னரங்கில் புலிகள்!
பின்பலமாய் நாங்கள்!
என்ன செய்வான் எதிரி?
இடுக்கிப் படை முடிந்து
தென்திசைக்கு மீளாமல்
எங்கள் திண்ணையிலே அதன்பிறகு
என்ன வேலை அவனுக்கு?
நாங்கள் வேடிக்கை மனிதரல்ல! அந்தக்
கோடியிலே தான் பிறந்த குஞ்சுகள் நாம்!
வாருங்கள்!
வரலாற்று நாயகனைப் பின்தொடர்வோம்!

-கலைவாணி இராஜகுமாரன்-